பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை. ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 04 புதன்கிழமை (18.06.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 203

# ஊடக சுதந்திரத்துக்குப் போராட சகல கட்சிகளும் ஒரே அணியில்!

## அரச தரப்பும் வந்து தொற்றிக்கொண்டது

கொழும்பு, ஜூன் 18

அரச பாதுகாப்புத் தரப்பினாலும் இனந்தெரியாத குழுக்களினாலும் ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் எதிராக அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பதாகக் கூறப்படும் நிலையில், ஊடக சுதந்திரத்துக்காகப் போராடுவதற்கென பரந்த கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் நோக்குடன் நேற்று நடத்தப்பட்ட முக்கிய கூட்டத்தில் அரசுத் தரப்பும் ஆர்வத்துடன் பங்குபற்றியிருக்கின்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன் கடலில் குண்டுச் சத்தங்கள்

யாழ்ப்பாணம் ஜூன் 18

வடமராட்சி, காங்கேசன்துறைக் கடற்பகுதியில் நேற்று இரவு 10.30 மணியளவில் பெரும் குண்டுச சத்தங்கள் கேட்டன.

அரைமணி நேரம் வேட்டுச் சத்தங்களும், குண்டுச் சத்தங்களும் கேட்டுக் கொண்டிருந்தன. படையினரின் ஒத்திகை நடவடிக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அக்கரைப்பற்றில் சிப்பாய் மீது சூடு

மட்டக்களப்பு, ஜூன் 18

அக்கரைப்பற்று, சாகாமம் வீதியில் நேற்று முன்தினம் இரவு 9.45 மணியளவில் ரோந்து சென்று படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர் எனக் கூறப்படும் துப்பாக்கிப் பிரயோகத்தில் படைச்சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நீண்டகால விடுதலைப் போராட்டத்தின் வெற்றி தவிர்க்க முடியாதது; நிச்சயம

### நோர்வே "பொங்கு தமிழ்" நிகழ்வில் எரித்திரியப் பிரதிநிதி



ஒஸ்லோ, ஜூன்18

நீண்ட காலத்துக்கு நடைபெறும் விடுதலைப் போராட்டம் எப்போதும் வெற்றியடைந்தே தீரும். அது தவிர்க்க முடியாதது.

உங்கள் போராட்டத்துக்கு எரித்திரிய மக்கள் ஆதரவு என்றும் உண்டு.

இவ்வாறு ஒஸ்லோவில் நடைபெற்ற ''பொங்கு தமிழ்'' நிகழ்வில் கலந்து கொண்டுஉரையாற்றிய நோர்வேயில் உள்ள எரித்திரிய அமைப்பின் பிரதிநிதி சாம் யாறட் தெரிவித்தார்.

காலநீட்சியுடைய விடுதலைப் போராட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூரில் 17 தொண்டுப் பணியாளர் கொலை குறித்து சர்வதேச விசாரணைக்கு அந்த அமைப்பு வற்புறுத்தல்

கொழும்பு, ஜூன் 18

மூதூரில் 2006 ஆம் ஆண்டு மனித நேயப் பணியாளர்கள் 17 பேர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக சர்வதேச விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென பட்டினிக்கு எதிரான அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. அதனை வலியுறுத்தும் விதத்தில் சர்வதேச பிரசாரமொன்றையும் அது ஆரம்பித்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)


## அன்னை தங்கம்மா அப்பாக்குட்டிக்கு தமிழக முதல்வர் இரங்கல் செய்தி

சென்னை, ஜூன் 18

சைவ சமயத்தின் நிகழ்கால மறுமலர்ச்சித் தாயாக விளங்கிய மறைந்த ஆன்மீக அன்னை கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் இழப்பு ஈழத்தமிழர்கள் அனைவருக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

நயினை நாகபூசணி அம்மன் தேரில் வீதிவலம் வரும் கண்கொள்ளாக் காட்சி



## நயினை நாகபூசணியின் தேர் வலம் காண பல்லாயிரக்கணக்கில் திரண்டது பக்தர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன்18

ஆயிரம் ஆயிரம் பக்தர்கள் புடைசூழ நயினாதீவு நாகபூஷணி அம்மன் நேற்று தேரேறி வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

நேற்றுக்காலை ஏழு மணிக்கு ஆரம்பமான வசந்த மண்டபப் பூசைகளைத் தொடர்ந்து முற்பகல் 9.30 மணியளவில் அம்பாள் தேரில் ஆரோகணித்தார். மிகப் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் ஒன்றுகூடி தேர் இழுக்க 'அரோகரா' கோஷம் வானைப் பிளந்தது. அம்பாளின் தேர் வலம் ஆரம்பமானது.

ஏராளமான ஆண்கள் அங்கப் பிரதட்சணையிலும் காவடி எடுத்தும் பெண்கள் அடியழித்தும் கற்பூரச்சட்டி ஏந்தியும் தத்தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர்.பல்வேறு இடங்ளிலும் இருந்து வருகை தந்திருந்த பஜனை குழுவினரின் தோத்திரப் பாடல்கள் வானில் கலக்க நயினை நாகபூசணியின் தேர்வலம் நடந்தேறியது.

எதிர்பார்த்தவாறு பெரும் எண்ணிக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக மாணவன் அ'புரம் சிறையில்

கொழும்பு, ஜூன் 18

தமிழ்நாட்டைச் சேர்ந்த 16 வயது மாணவன் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் இரு வாரங்களாகத் தடுத்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான சட்டமூலம் பெரும் இழுபறிக்கு மத்தியில் விவாதத்துக்கு ஏற்பு

கொழும்பு, ஜூன் 18

குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டோரையும் சாட்சிகளையும் பாதுகாக்கும் சட்டமூலம் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் - பெரும் இழுபறியுடன் - நேற்று நாடாளுமன்றிற்குக் கொண்டுவரப்பட்டது.

தமக்குத் தெரிவிக்கப்படாமல் இந்தச் சட்டமூலத்தில் அதிகூ திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்று கூறியே இக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## துண்டிப் பகுதியில் ஷெல்கள் வீழ்ந்தன மக்கள் இடம் பெயர்ந்தனர்

யாழ்ப்பாணம், ஜூன் 18

கொழும்புத்துறை, துண்டிப் மயானப் பகுதியில் நேற்று பிற்பகல் 1.45

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. தேர்தல் ஆட்சேபனை மனு: எதிர்மனுதாரர்களுக்கு நோட்டீஸ்

கொழும்பு, ஜூன் 18

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்தப்பட்ட கிழக்கு மாகாணசபைத் தேர்தலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி மகாவித்தியாலய ஆசிரியர்கள் நால்வர் கைது

கொழும்பு, ஜூன் 18

கிளிநொச்சி தமிழ் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த இரண்டு பெண் ஆசிரியைகள் உட்பட நான்கு ஆசிரியர்கள் மருதானைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



அன்னை சிவத்தமிழ்ச்செல்வி
கலாநிதி
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்களின் மறைவு சைவத்திற்கும் தமிழுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரம்பொருளை பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகிகள், பணியாளர்கள்,
தியாகி அறக்கொடை நிறுவனம்
(527, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்)
(75476)

## நன்றி நவிலலும் 'வைடூரியம்' நினைவு மலர் வெளியீடும்



அமரர் துரையப்பா வைத்திலிங்கம்
(ஓய்வுபெற்ற மேலதிக அரச அதிபர்)

28.05.2008 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் துரையப்பா வைத்திலிங்கம் அவர்களின் துயரச் செய்தி கேட்டு பத்திரிகைகள் மூலமும் தொலைபேசி மூலமும் எம்முடன் அனுதாபங்களை பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்துடன் அன்னாரின் நினைவாக இன்று (18.06.2008) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு 'வைடூரியம்' எனும் நினைவுமலர் வெளியீடும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

மனைவி ஜெகதீஸ்வரி,
பிள்ளைகள், மருமக்கள்.
(75479)

## கண்ணீர்ப் பூக்கள்



சைவத்தையும் தமிழையும் வளர்தெடுத்து நலிவுற்றோர் உள்ளத்தில் குடியிருந்து தமிழ் உலகம் போற்றும் உத்தமியாம்
கலாநிதி
சிவத்தமிழ்ச்செல்வி
அமரர் தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்களின் பிரிவால் துயருறும் அனைவருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கோணப்புலம் ஞானவைரவப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபை, கோணப்புலம் ஞானவைரவர் கோயில்,
மல்லாகம்.
(சி-553391)

## கண்ணீர் அஞ்சலி



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் வழியில் சைவத்துக்கும் தமிழுக்கும் இரண்டு நூற்றாண்டுகளில் அரும்பணியாற்றிய
சிவத்தமிழ்ச்செல்வி துர்க்கா துரந்தரி
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்களின் இழப்பினால் துயருறும் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தான மஹாசபை தன் கண்ணீர் அஞ்சலிகளை அன்னாரின் பாதக் கமலங்களில் சமர்ப்பிக்கிறது. (75484)

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள்
தேவஸ்தான மஹாசபை.

## மேல் நீதிமன்ற நீதிபதி சுவர்ணராஜ் மட்டக்களப்புக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன்18

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி பி.சுவர்ணராஜ் மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

நீதிச்சேவை ஆணைக்குழு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இந்த இடமாற்றத்தைச் செய்துள்ளது.

நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த நீதிபதி சுவர்ணராஜுக்கு சட்டத்தரணிகள் மற்றும் பணியாளர்கள் நீதிமன்ற வளாகத்தில் பிரியாவிடை நிகழ்வுகளை நடத்தினர்.

மேல் நீதிமன்ற நீதிபதியாகப் பதவியேற்றுள்ள இ.த. விக் னராஜா சிவில் மற்றும் குற்றவியல் சார்ந்த நீதிச் சேவைப் பணிகளை பொறுப்பேற்று நடத்துவார். (அ-1)

**படிவம்**

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் க.பொ.த (சா.த) டிசம்பர் 2008 பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.

Bharathy Pathippakam,
430, K. K. S. Road, Jaffna.

## வளர்ப்பு மீன்கள் விற்பனைக்கு

வளர்ப்பு மீன்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு
தொடர்பு: திருப்பதி
மெமோரியல் லேன், மானிப்பாய் (75477)

## தவறிவிட்டது

சிவாமினி கைலாசபிள்ளை என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (835211410V), விசேட அ. அட்டையும், உத்தியோக அ. அட்டையும் மற்றும் முக்கிய ஆவணங்களும் யாழ். நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சாந்திகம், யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (75461)

## தவறிவிட்டது

உரும்பிராய் வடக்கு, உரும்பிராய் எனும் முகவரியுடைய திருஞானசம்பந்தர் அனுசா என்பவரின் தேசிய அ. அட்டை (807812629V) நயினாதீவுப்பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும். (75463)

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



சைவத்தையும் தமிழையும் வளர்த்தெடுக்க அரும் பணியாற்றியதுடன் ஏழைகளுக்கெல்லாம்உதவுவதில்தன்னை முழுமையாக ஈடுபடுத்திய அன்னயின் ஆத்மா சாந்தியடைய துர்க்கை அம்மனை பிரர்த்திக்கிறோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்
மக்கள் வங்கி,
சுன்னாகம்.
(75488)

## கண்ணீர் அஞ்சலி



சைவத்துக்கும் தமிழுக்கும் அரும்பெரும் தொண்டாற்றிய
அன்னை
சிவத்தமிழ்ச்செல்வி
கலாநிதி
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

முச்சக்கர மோட்டார் வண்டிச் சேவைச் சங்கம்
இல.41 முனீஸ்வர வீதி, யாழ்ப்பாணம்.
(75473)

## இதயம் நெகிழ்ந்த கண்ணீர் காணிக்கை



சைவமும் தமிழும் தழைத்தோங்க தன்னையே அர்ப்பணித்த தூய
அன்னை
சிவத்தமிழ்ச்செல்வி
கலாநிதி
தங்கம்மா அப்பாக்குட்டி
பெருமாட்டிக்கு எமது இதயம் நெகிழ்ந்த கண்ணீர்க் காணிக்கைகள்.

பரமேஸ்வரா இயக்குநர் சபை,
ஆலய பரிபாலன சபை,
அருள்மிகு பார்வதி சமேத
ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயம்
[illegible]
(75481)

## அறிவாலயத்தின் அஞ்சலி



அறிவாலயத்தை திறந்து வைத்த எம்
அன்னை சிவத்தமிழ்செல்வி
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

நிர்வாக சபை
அறிவாலயம்,இணுவில்.
(சி-553388)

## பிரார்த்தனை செய்கிறோம்



சைவத்துக்கும் தமிழுக்கும் அரும்பெரும் தொண்டாற்றிய
சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
வைதிக அறநெறி பிறழாமல் வாழ்ந்து காட்டி சைவ மக்களை வாழவைத்து அந்தணரைப் போற்றி வாழ்த்தி என்றும் சிவநெறியிலே சிறக்க வைத்த அம்மாவின் ஆன்மா இறையடி அடைய பிரார்த்திக்கின்றோம்.
(75472)

ஆ.சந்திரசேகரக் குருக்கள்
வாய்க்காற்தரவை மூத்த நாயனார் தேவஸ்தானம் , நீர்வேலி.

## கண்ணீர் அஞ்சலி

அமரர் வேலுப்பிள்ளை ஆனந்தஜெயந்திரன்

'மரணத்தின் மூலம் வாழ்வு மாறுபடுவதே அன்றி அழிக்கப்படுவதில்லை இதுவே எங்கள் விசுவாசம்'

எமது வித்தியாலய ஆசிரியர் திரு.ஆ.ரஜீவனின் தந்தை யாரின் பிரிவால் துயருற்றிருக்கும் ஆசிரியருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழையமாணவர் பா.அ. சங்கம்
யா/ஊர். புனித மரியன் (றோ.க.) மகளிர் வித்தியாலயம்
(75478)

## மரண அறிவித்தல்கள்

### தம்பிராஜா பாலகிருஷ்ணன்

(K.T.பாலகிருஷ்ணன் -ஓய்வுபெற்ற தபாலதிபர்)



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட K.T.பாலகிருஷ்ணன் 16.06.2008 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராஜா - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் கமலாசனி ஆகியோரின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான K.T.சுப்பிரமணியம், K.T.கணபதிப்பிள்ளை, K.T.நடராஜா, திருமதி க.அன்னலட்சுமி மற்றும் இ.மனோன்மணி, சு.சரஸ்வதி, K.T.ராஜசிங்கம் (பாங்கொக்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பா.இரகுநாதன்(கோட்டக் கல்வி அதிகாரி, பருத்தித்துறை), காலஞ்சென்ற பா.பாலசுப்பிரமணியம் மற்றும் பா.கிருஷ்ணராஜா, திருமதி ஜே.ராஜகுமாரி(தையல் ஆசிரியை), பா.பஞ்சகிருஷ்ணன்(கனடா), திருமதி ஜே.ரதி(கனடா), திருமதி பா.ரட்ணமலர்(ஆசிரியை, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயக்குமார் (கனடா), பாஸ்கரசிங்கம்,சுகிர்தா, புஸ்பராணி (புலோலி ப.நோ. கூ.சங்கம்), சந்திரவதனா(கனடா), காலஞ்சென்ற ஜெயக்கொடி ஆகியோரின் மாமனும் ஜெனனி, பூரணி, காயத்திரி, திவ்வியா (கனடா),வித்தியா(கனடா), சிந்துஜா(கனடா), துர்க்கா, கார்த்திகா (அவுஸ்திரேலியா, அனுசா(கனடா), ஆர்த்தி (கனடா), சத்தியமூர்த்தி (கனடா) ஆகி யோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(17.06.2008)செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியை கோரியடி மயானத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலோலி கிழக்கு,பருத்தித்துறை தகவல்: பா.இரகுநாதன் (மகன்).
(75485)

### ஆறுமுகம் குமாரசாமி

(ஓய்வுபெற்ற உடற்கல்வி ஆசிரியர், தியாகராசா மத்திய மகா வி. காரைநகர்)



காரைநகர், வேதர் அடைப்பைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டு தற்போது சுன்னாகம், ஐயனார் கோயிலடியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பரியாரி மூத்த தம்பியின் மூத்த பேரனாகிய ஆறுமுகம் குமாரசாமி நேற்று(17.06.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி ஆறுமுகம்-அன்னமுத்து தம்பதியரின் மூத்த புதல்வரும் காலஞ்சென்ற திரு.திருமதி கணவதிப்பிள்ளை-பொன்னமா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சௌந்தராம்பிகையின் அன்புக் கணவரும் சற்குணராசா, சாரதாதேவி, அமரர் தவயோகராஜா, தேவராஜா(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகேஸ்வரியின் மாமனும் கனகசபை (முன்னாள் வர்த்தகர், அன்னம் சாறி உரிமையாளர்), நவரத்தினம்(முன்னாள் உரிமையாளர், வி.எஸ். ஆறுமுகம் அன் சன்ஸ், நீர்கொழும்பு), வேலாயுதபிள்ளை (முன்னாள் வர்த்தகர், A.V.P., சுன்னாகம்), காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் டாம்பிகாதேவி, இராஜேஸ்வரி, சந்திரசேகரம்(விஸ்ணுகரன், சுன்னாகம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கஜன் (லண்டன்), நிரஞ்சன், டிலக்ஷனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(19.06.2008) வியாழக்கிழமை காலை 8 மணியளவில் சுன்னாகம் ஐயனார் கோயிலடி குட்டியாண்டி வளவு இல்லத்தில நடைபெற்று, பூதவுடல் காரைநகர் சாம்பலோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார் கோயிலடி,
குட்டியாண்டிவளவு,சுன்னாகம்.
தொ.பே.: 060221 4380,
0778090547

தகவல்:
கு.சற்குணராசா (மகன்),
ஆ.சந்திரசேகரம்(சகோதரன்).
(75486)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிற்பி சரவணபவனின் பவளவிழா நூல் வெளியீட்டுவிழாவின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
நிகழ்வில் டாக்டர் தி.ஞானசேகரன் விழாநாயகர் சிற்பி சரவணபவனிடம் பவளவிழா மலரை வழங்குவதை முதலாவது படத்திலும் கலாபூசணம் சு.துரைசிங்கம் பவளவிழா நாயகருக்கும் துணைவியாருக்கும் கேடயம் வழங்கிக் கௌரவிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.
சிறுகதைத் தொகுதியை பேராசிரியர் அ.சண்முகதாஸ் வெளியிட்டு வைக்க அதனை லயன் செ.மகாதேவா பெற்றுக் கொள்வதை மூன்றாவது படத்திலும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை நான்காவது படத்திலும் காணலாம். (68-38)

# ஈழத்து இலக்கியத்தை மதிப்பிடும்போது சிற்பியை நீக்கிவிட்டுக் கூற இயலாது

## பவள விழாவில் செங்கை ஆழியான்

சுன்னாகம், ஜூன் 18

ஈழத்திலக்கியத்தில் முக்கியத்துவ முடைய பல முன்னணி எழுத்தாளர் களை "கலைச் செல்வி" சஞ்சிகை உருவாக் கியது. அவ்வாறான எழுத்தாளர்களை இனங்கண்டு உருவாக்கியவர் சிற்பி அவர்களாவார்.

அவரை நீக்கிவிட்டு ஈழத்து இலக்கியத் தைப் பற்றிக் கூற முடியாது; எழுத முடி யாது.

இவ்வாறு தெரிவித்தார் எழுத்தாளர் செங்கை ஆழியான்.

சிற்பி சிவசரவணபவனின் பவளவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை செங்கை ஆழி யான் தலைமையில் கந்தரோடை ஸ்கந்தவ ரோதயக் கல்லூரியில் நடைபெற்றது.

அங்கு தலைமையுரையாற்றுகையி லேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தமது உரையில் அவர் மேலும் குறிப்பிட்ட தாவது:

ஈழத்தில் முதற் சிறுகதைத் தொகு தியை வெளியிட்ட பெருமையும் சிற்பியையே சாரும். தன்னுடைய கதைகளை அல்லாமல் ஏனைய ஈழத்து எழுத்தாளர்களின் கதைக ளைத் தொகுத்து இந்தி யாவில் அத்தொகு தியை வெளியிட்டு ஈழத்துச் சிறுகதை இலக்கியத்தை அறிமுகப்படுத்தும் பணியை மேற்கொண்டார். அத்துடன் 'கலைச்செல்வி' வாயிலாக ஈழத்திலக்கியத்தைத் தகுந்த முறையில் அறிமுகம் செய்து வளர்த்தெ டுத்தார். சிறுகதைகள், நாவல்களையும் அவர் எழுதினார். சிறுகதை எழுத ஆரம்பிப் பவர்கள் சிற்பியின் கதைகளை கட்டாயம் படிக்க வேண்டும். ஈழத்திலக்கிய வளர்ச் சியில் அந்தளவுக்கு முக்கியத்துவம் மிக்க சிற்பி ஐயாவின் பவளவிழாவை நடத்து வதில் யாழ். இலக்கிய வட்டமும், "ஞானம்" சஞ்சிகையும் பெருமையடைகின்றன - என்றார்.

ஞானம் சஞ்சிகையின் ஆசிரியர் டாக் டர் தி.ஞானசேகரன் தமது உரையில் தெரிவித்ததாவது: இன்றுள்ள படைப் பாளிகள் பலரும் "கலைச் செல்வி"யின் விழுதுகளே. அதுபோல இன்று வெளி வரும் சஞ்சிகைகளும் கலைச்செல்வியின் விழுதுகளாகும். கலைச் செல்வியை வாசித் துச் சுவைத்து அதனால் உந்தப் பட்டு ஒரு சஞ்சிகை வெளியிட வேண்டுமென்று விரும்பினேன். அந்த விருப்பமே ஞானம் சஞ்சிகையை வெளியிட என்னைத் தூண் டியது. என்னைப் போன்ற பலரை உரு வாக்கி எழுத்துலகில் நடமாட வைத்தவர் அவர். எனது குருநாதருக்கான காணிக்கை யாகவே இப்பவளவிழா மலரைத் தயாரித் தேன் - என்றார்.

பவளவிழா மலரை தி.ஞானசேகரன் வெளியிட்டு அதனை பவளவிழா நாய கரிடம் கையளித்தார். சிற்பி சிவசரவண பவன் எழுதிய "நினைவுகள் மடிவ தில்லை" சிறுகதைத் தொகுதியை பேராசிரியர் அ.சண்முகதாஸ் வெளியிட்டு வைக்க லயன் செ.மகாதேவா அதனைப் பெற்றுக் கொண்டார்.

நிகழ்வில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், கோப்பாய் ப.சிவானந்த சர்மா, கவிஞர் சு.துரைசிங்கம், எழுத் தாளர் ஐ.சாந்தன் உட்படப் பலரும் உரையாற் றினர்.

பல நிறுவனங்களும் இலக்கிய ஆர் வலர்களும் பவளவிழா மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி கேடயமளித்து கௌரவமளித்தனர். பெரும் எண்ணிக்கை யான எழுத்தாளர்களும் இலக்கிய நேசர்க ளும் விழாவுக்குச் சமூகமளித்து விழா மண்ட பத்தை நிறைத்திருந்தனர். (அ-38)

## தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா

சங்கானை, ஜூன் 18

வலி.வடக்கு பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை அளவெட்டி பொது நூலகத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலர் இ.அருணகிரி தலை மையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய உள் ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மது மதி வசந்தகுமாரும் சிறப்பு விருந் தினராக தெல்லிப்பழை பிரதேச செயலர் எஸ்.முரளிதரன், தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கைலாசநாதன் ஆகியோரும் கலந்து கொள்வர். (203-29)

# கைதடி இராஜபுரிக் கிராம மாணவர்கள் மின்சாரம் இன்றிப் பெரும் சிரமம்

நாவற்குழி, ஜூன் 18

கைதடி கிழக்கு கிராமசேவகர் பிரிவில் உள்ள கைதடி இராஜபுரிக் கிராமத்திற்கு மின்வசதி வழங்கப்படாமையால் அங் குள்ள மாணவர் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்தில் ஐம்பதிற்கும் மேற் பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்ற போதிலும் இப்பகுதிக்கு மின் வழங்காதது இங்கு பெரும் குறையாகவே உள்ளதாக வும் கூறப்படுகின்றது.

இங்கு நூறுக்கும் மேற்பட்ட மாணவர் கள் வசித்து வருகின்றனர். இரவு வேளை களில் தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள மின்வசதி இல்லாமையால் பெரும் சிரமங்களுக்கு தாம் ஆளாவதா கவும் மாணவர் கவலை தெரிவிக்கின் றனர்.

தாம் கல்வி நிலையில் பின்நிலைக்கு தள்ளப்படுவதற்கு இதுவும் காரணம் என்று கவலை தெரிவிக்கின்றனர்.

இது சம்பந்தமாக பல தடவைகள் உரிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தப் பட் டன. நிதி வசதி இல்லை என்ற காரணத்தை கூறி இங்கு மின் வழங்குவது தடைப் பட்டு வருகிறது.

எனவே இப்பகுதி ஏழை மாணவர்க ளின் கல்வி நிலையைக் கருத்திற் கொண்டு இப் பிரதேசத்திற்கு மின் வழங்க சம்பந்தப்பட்டோர் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (203-288)

## விளையாட்டு நிகழ்வுகள்

சுழிபுரம், ஜூன் 18

உருத்திரா முன்பள்ளி சிறார்களின் வரு டாந்த விளையாட்டு விழா சங்கானை கலா சார மண்டப மைதானத்தில் இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு திருமதி பிறேம லதா சுபாஸ்கரன் தலைமையில் நடைபெற வுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தி னராக சி.குகனேசனும் கௌரவ விருந்தி னராக செல்வி இ.ஜெயராணியும் கலந்து கொள்வர். (1-28)

* * *

சுழிபுரம் ஜூன் 18

சுழிபுரம் பறாளாய் நாவலர் பாலர் பாட சாலையில் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று புதன்கிழமை பி.ப. 1.30 மணிக்கு நிலைய மண்டபத்தின் முன்பாக வுள்ள விளையாட்டுத் திடலில் நிலையத் தலைவர் க.குகதாசன் தலைமையில் நடை பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தி னராக வெ.இராஜ்குமாரும் சிறப்பு விருந்தி னராக செ.கண்ணதாசனும், கௌரவ விருந்தி னராக ஜீவராஜ், க.கணேசலிங்கம் ஆகி யோரும் கலந்து கொள்வர். (1-28)

* * *

வலி.வடக்கு, ஜூன் 18

அமரர் சந்திரகுமார் ஞாபகார்த்தமாக அராலி திருமகள் விளையாட்டுக் கழகம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனு சரணையுடன் நடத்தும் 7 பேர் பங்குபற் றும் விலகல் முறையிலான உதைபந் தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு திருமகள் விளை யாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ள வுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* தெல்லிப்பழை நாமகள் வி.க.'ஏ' அணி எதிர் அராலி எ.எல்.வி.க.'பி'.அணி

* நவாலி சென்.பீற்றர்ஸ் வி.க.'ஏ'அணி எதிர் நவாலி யுத் யூனியன் வி.க.பி.அணி. (203-86)

# தமிழுக்கும் சைவத்துக்கும் அளவில்லாப் பணியாற்றிய சிவத்தமிழ்ச் செல்வியின் இழப்பு ஈடு செய்ய முடியாதது

## அஞ்சலி உரைகளில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன்18

தமிழுக்கும் சைவத்திற்கும் அளவிலாப் சமூகப் பணிகளைச் செய்து வந்த சிவத் தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக் குட்டியின் பிரிவு எமக்குச் சொல்லொணாத் துயரத்தைத் தருகின்றது.

இவ்வாறு கவலை தெரிவித்துள்ளார் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.

சிவத்தமிழ்ச் செல்வியின் இறுதி அஞ் சலி நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி உரையாற்றியபோதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

தொடர்ந்துஉரையாற்றுகையில்:-

இன்று மறக்கமுடியாத துக்கமான நாளா கும். தமிழுக்கும் சைவசமயத்திற்கும் மட் டுமன்றி வசதியற்ற மக்களுக்கும் தன்னா லான சமூகப் பணிக ளைச் செய்தவர் இவர். இவரது பிரிவு எமக்கு சொல்லொணா துன் பத்தை தருகிறது.

ஒழுக்கம், அறிவு கொண்டு முன்மாதி ரியாக வாழ்ந்தவர். ஏழை எளிய மக்கள் இவரால் சிறப்புப்பெற்றார்கள். தமிழ் மக் களுக்கு முன்மாதிரியான பரந்த சேவையை வழங்கியவர்.

1995 ஆம் ஆண்டு சமாதான யாத்தி ரையை நாம் செய்தபோது எம்முடன் இருந்துசிறப்பித்தார். மக்களது நல்வாழ் வில் அவர் இடம்பெற்றிருக்கிறார்.

இன்பமும் சாந்தியும் இவருக்கு இறை வன் வழங்க வேண்டும். இவரால் விடப் பட்ட பணிகள் தொடர்ந்தும் நடைபெற வேண்டும் - என்றார்.

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை உரையாற்றுகையில்:-

சிவத்தமிழ்ச் செல்வி அவர்கள் சொல் வளம் மிக்கவர். அதனை விட அவரது செயல் போற்றப்பட்டது.

அவரது சேவை என்றும் நிலைத்து நிற் கும். யாழ்ப்பாணத்து தமிழ் மக்களது அன்னையாக அவர் போற்றப்படுகிறார் -என்றார்.

அரச அதிபர் க.கணேஸ் தமதுரையில்:- தெல்லிப்பழையில் இருந்துபொது மக்களுக்கு ஒளி விளக்காக நின்று சேவை புரிந்த ஒளி விளக்கு அணைந்து விட்டது.

ஆலய செயற்பாடுகளுடன் அடங்கி நிற்காது மக்களுக்கு சேவை புரிந்து அவ ரது சேவை மூலம் மக்கள் நெஞ்சங்களில் அன்னையாக அழைக்கப்பட்டவர்.

துன்பதுயரங்களில் வாடும் மக்களுக்கு ஆறுதலளித்தவர். யாழ்.மாவட்ட நிர்வா கத்தைப் பொறுத்தவரை மக்கள் படுகின்ற கஷ்டத்துக்கு நிவாரணம் காண அவர் விரும்பியவர் - என்றார்.

# நயினை உற்சவத்தில் சிறுமியின் காப்பை திருடிய சிறுவன் வகையாக மாட்டினான்

மந்திகை, ஜூன் 18

நயினைதீவு நாகபூசணி அம்மன் ஆல யத் திருவிழாவில் சிறுமியின் காப்பைக் களவாடிய சிறுவன் தொண்டர் சபையால் மடக்கிப் பிடிக்கப்பட்டான்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற சப் பரத் திருவிழாவின்போது 5 வயதுச் சிறுமி ஒருத்தியிடம் 14 வயதுச் சிறுவன் ஒருவன் நயமாகப் பேசி அவளது காப்பைக் கள வாடினான். சிறுமியின் அழும் குரலைக் கேட்ட தொண்டர்கள் சிறுவனை மடக்கிப் பிடித் தனர். சிறுவன் திருவிழாப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸாரிடம் ஒப் படைக் கப்பட்டான். பொலிஸார் சிறுவனை எச் சரித்து விடுவித்தனர். (1-202-111)

## இணுவில் கந்தன் ஆலயத்தில் நாளை மஞ்சத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 18

இணுவில் கந்தசாமி ஆலயத்தின் மஞ் சத் திருவிழா நாளை வியாழக்கிழமை நடை பெறவுள்ளது.

காலை 6 மணிக்கு சண்முகப்பெரு மானுக்கு 1008 கலச சங்காபிசேகமும் தொடர்ந்து பூஜைகளும் இடம்பெறும்.

பிற்பகல் 4 மணிக்கு திருமஞ்சத் திருவீதியுலா இடம்பெறும். (202)

## அலுவலகத் திறப்பு விழா

மந்திகை, ஜூன் 18

வடமராட்சி செவிபுலனற்றோர் நிறு வன அலுவலகத்தின் திறப்புவிழா இன்று காலை 9.30 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரி வீதியில் இடம்பெறவுள்ளது.

நிறுவனத் தலைவர் த.செந்தில்குமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் பிர தம விருந்தினராகக் கலந்துகொள்வார்.(1-218)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலியுடன் ஆன்ம ஈடேற்றத்திற்காகவும் பிரார்த்திக்கின்றோம்



சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா காருண்ணிய உள்ளம் கொண்டு பக்தியுடன் சமூகத் தொண்டு, இறைத்தொண்டு புரிந்த தாயார். அவர்களின் நித்திய இளைப்பாறுதலுக்காக எமது அஞ்சலி நிகழ்வு இன்று (18.06.2008) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு நெடுந்தீவு அபிவிருத்தி மையத்தில் நடைபெறும்.

நெடுந்தீவு அபிவிருத்தி மையமும், நெடுந்தீவு மக்களும். (75467)

## கண்ணீர்க் காணிக்கை



சைவத்துக்கும் தமிழுக்கும் அரும்பெரும் தொண்டாற்றி உலகின் கலங்கரை விளக்காக விளங்கிய சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மாஅப்பாக்குட்டி அவர்களுக்கு எமது கண்ணீரை காணிக்கையாக்குகின்றோம்.

IDM Affiliated University College, Jaffna, Manipay, Nelliady. Asst.Director & Staff

## அன்னைக்கு அஞ்சலி



சைவமும் தமிழும் வளர தன் முழு வாழ்வையும் அர்ப்பணித்து அமரத்துவமடைந்த சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாருக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

ஆலய பரிபாலன சபை
சாளம்பை முருக மூர்த்தி ஆலயம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை திருமதி சி.கனகசபை, பணியாளர் த.சிவகுமார் ஆகியோரின் அன்புத் தாய் திருமதி **தம்பிராஜா செல்லம்மா** அவர்கள் 10.06.2008 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தமையையிட்டு ஆழ்ந்த கவலையடைவதோடு அவரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/வட.இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை. (அ/553382)

## கண்ணீர் அஞ்சலி



கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவர் லயன் G.T.ஞானசேகரவேல் JP அவர்களின் பாசமிகு சகோதரியான திருமதி **ஞானமலர் சற்குணநாதன்** அவர்களின் மரணச் செய்திகேட்டு ஆழ்ந்த கவலை அடைந்தோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கோப்பாய் லயன்ஸ் கழகம். (75482)

## வீடு விற்பனை

தட்டாரகடவை, அளவெட்டி வடக்கில் 2½ பரப்புடைய காணியுடன் வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: K.கண்ணன், சிவாஸ் ஐஸ்கிறீம் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
தொ.பே: 0774983339

## பதம் பணிந்து அஞ்சலிக்கின்றோம் அம்மா!



அறப்பணியின் சிகரமாய் அரவணைத்து ஆதரவு நல்கி பெறற்கரிய பயன்பல பெறவைத்த எம் தெய்வீகத் தாயவள் முத்திநிலையில் இன்புற்றிருக்க அஞ்சலித்து வணங்குகின்றோம்!!!

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப்பாடசாலை. அறநெறிப் பாடசாலைக் குடும்பம்.

## தெய்வீகத் தாயாரை வணங்குகிறோம்



**தங்கம்மா அப்பாக்குட்டி**

யா/மானிப்பாய் மெமோறியல் அன்னையவள் பாரினில் புகழ் பெற்று கல்விப் பணியாற்ற கரந் தந்து வழிகாட்டி ஆசி தந்த தாயே! வரலாறு உள்ளவரை வணங்குகின்றோம் தாயே! பெறுக நித்தியப் பெருவாழ்வு! தருக நல்லாசிகள்!

அ.மு.அருணாசலம், தலைவர், பழைய மாணவர் சங்கம் (அனைத்துப் பழைய மாணவர்கள் சார்பாக)
மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை. (75452)

## கண்ணீர் அஞ்சலி



எமது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி J.P அவர்களின் மறைவினால் ஆழ்ந்த துயரமடைவதுடன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல துர்க்கை அம்பாளை பிரார்த்திப் போமாக!

திருமதி இராணி குமாரசுவாமி
பத்தாவத்தை, இளவாலை.

## கண்ணீர் அஞ்சலி



வாரி வழங்கிய அறப்பணி அன்னையே! தங்கள் நித்திய பெருவாழ்வுப் பேரின்பத்திலும் எம்மை ஆசீர்வதியுங்கள்.

வேலக்கை ஆலய வீதி, மானிப்பாய். யாழ். வீதி, மானிப்பாய். (75400)

## கண்ணீர் அஞ்சலி



மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப்பாடசாலையின் நிறுவுனரும் சைவப்பெருந்தகையும் சமாதான நீதிவானும் ஆகிய சமூகஜோதி **கா.கணேசதாசன்** ஐயா அவர்கட்கு எமது அஞ்சலிகள்!!

மானிப்பாய் மருதடிவிநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை. அறநெறிப் பாடசாலைக் குடும்பம். (75454)

## கண்ணீர் அஞ்சலி



அன்னை
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களின் மறைவு சைவத் தமிழ் உலகுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீர்வேலி. காமாட்சி அம்பாள் இந்து பரிபாலனசபை. (75442)

## கண்ணீர் அஞ்சலி



சைவத்திற்கும் தமிழுக்கும் அரும் தொண்டாற்றிய அன்னை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு எமது கண்ணீரைக் காணிக்கை ஆக்குகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய துர்க்கை அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

09,சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். துர்க்கா நிருமணசேவை

## இதய அஞ்சலி



சிவத்தமிழ்ச் செல்வி
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

பாதிக்கப்பட்ட மக்களின் மேன்மைக்கும் சமூக, சமய வளர்ச்சிக்கும் வித்திட்டு பாதிக் கப்பட்ட சிறார்களின் வாழ்வியலில் மாற்றத்தை ஏற்படுத்தி இறைபதம் கலந்து விட்ட மதிப்பிற் குரிய அன்னையின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுவதோடு அவரின் பிரிவால் துயருறும் அனைத்து சமூகத்தோடு நாமும் எமது அன்னைக்கு அஞ்சலியை செலுத்துகின்றோம்

World vision Lanka யாழ்ப்பாணம். (75447) முகாமையாளரும், உத்தியோகத்தர்களும்.

## பிராந்திய மகாநாடு

| | |
|---|---|
| காலம் | : இன்று (18.06.2008) புதன்கிழமை |
| நேரம் | : காலை 10 A.M |
| இடம் | : யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ்ப்பாணம் (WESCO PHARMACY க்கு பக்கத்தில்) |
| பிராந்தியம் | : 09 |
| பிரதம விருந்தினர் | : லயன் Dr.V தியாகராஜா அவர்கள் பாஸ்ட் சர்வதேச லயன் தஞ்சர் |
| கௌரவ விருந்தினர் | : லயன் S.S. பத்மநாதன் (முன்னைநாள் பிராந்திய தலைவர்) லயன்T.சற்குணராஜா MJF.JP (பிராந்திய இணைப்பாளர்) |

**பிரதம பேச்சாளர்:**
லயன் K.ஜெயரெத்தினம் (நல்லூர் கழக முன்னைநாள் தலைவர், முன்னைநாள் அதிபர், தொழில் நுட்பக் கல்லூரி,யாழ்ப்பாணம்).

லயன் க.மு.பத்மநாதன் MJF
பிராந்திய தலைவர் பிராந்தியம் - 09


## COMPUTER EXPRESS
Institute of Information Technology
#167, Kasthuriyar Rd, Jaffna. 0777222422
H.Office : #15, Stanly Rd, Jaffna. 0212228250

லங்கையில் முதற்தடவையாக கம்பனிகளுக்குளுடன்
Diploma in Computerized Accounting
ACCPAC + QuickBooks premier + MYOB
ஆகிய முன்னணி Accounting Software அனைத்துடனாகவும் கற்பிக்கப்படும்

Course Contents: Fundamentals of IT, Manual Accounting, Financial Accounting, Cost Accounting, Taxation (Including VAT), Stock Control, Bank Reconciliation, Budgeting, Fore Casting, Business Planing

வகுப்புக்கள் ஆரம்பம் :

| WeekDay | Weekend |
|---|---|
| 19/06/2008 | 21/06/2008 |
| 24/06/2008 | 22/06/2008 |
| Time : 10 AM | Time : 2.30PM |

Tally Accounting Package
புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.



## Land O'Lakes
INTERNATIONAL DEVELOPMENT

## Dairy Development Lanka
### பதவி வெற்றிடம்

சந்தைப்படுத்தல் உதவியாளர் (Marketing Assistant) - 02

ஒப்பந்த காலம்: 06 மாதங்கள்

எமது நிறுவனத்தின் தொழில்நுட்ப வழிகாட்டலுடன் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினரால் தயாரிக் கப்படும் பால் உற்பத்திகளின் விற்பனையை அதிகரிக்கக் கூடிய சந்தைப்படுத்தல் சம்பந்தமான அறிவும் அனுபவம் உள்ள இளை ஞர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. ஏனைய சந்தைப்படுத்தல் அனுபவம் உள்ளவர்களும் விண்ணப் பிக்கலாம்.

தகைமைகள்:

1. க.பொ.த.(உ.த.) கணக்கியல் பாடத்தில் சித்தி பெற்றவர்
2. 25 முதல் 35 வயதிற்கு உட்பட்டவர்
3. ஓடர்கள் எடுக்கக் கூடிய திறமை உள்ளவர்
4. மோட்டார் சைக்கிள் செலுத்தும் அனுமதிப்பத்திரம் உடையவர்
5. அர்ப்பணிப்புடன் வேலை செய்யக்கூடிய ஆற்றல் உள்ளவர்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்களை 'திட்ட ஒருங்கிணைப்பாளர், லான்ட் ஓ லேக்ஸ் பாற்பொருள் அபிவிருத்தி லங்கா, இல.40, கண்டி வீதி, யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்கு வருகின்ற 24.06.2008 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும்.


## யாழ்.வலயமட்டத் தமிழ்த்தினப் போட்டிகள்

அச்சுவேலி, ஜூன் 18

யாழ்.வலயமட்டத் தமிழ் மொழித்தினப் போட்டிகள் இன்றும் 21ஆம் திகதியும் இரண்டு நாள்கள் யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையிலும் யாழ்.மத்திய கல் லூரியிலும் நடை பெறவுள்ளன.

இன்று புதன் கிழமை நாட்டுக் கூத்துப் போட்டிக ளும், 21ஆம் திகதி சனிக்கிழமை ஏனைய மொழித்திறன் போட்டி களும் நடைபெறும்.

போட்டிகள் காலை 8.30 மணிக்கு ஆரம்ப மாகவிருப்பதால் போட்டிகளில் கலந்து கொள்ளும் பாடசா லைகள் தமது வரவு களை குறித்த நேரத் தில் உறுதி செய்து கொள்ளுமாறு யாழ். கல்வி வலயக் கல்வி ... அறிவித்துள்ளார்.

(203-11)


## COMPUTER EXPRESS
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
# 15, Sirambiyadi lane, Jaffna. Branch: #167, Kasthuriyar Rd, Jaffna.
PHONE 021 222 8250, 0777222422

80% Off மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2008

| Course | Duration | Old Fee | New Fee |
|---|---|---|---|
| Diploma in Computer Science | 4 Months | 10,750 | 2,150 |
| Honours Diploma in Computer Science | 5 Months | 13,000 | 2,600 |
| Diploma in Web page Designing | 4 Months | 10,750 | 2,150 |
| Diploma in Graphic Designing | 4 Months | 10,750 | 2,150 |
| Diploma in Desktop Publishing | 4 Months | 10,000 | 2,000 |
| Diploma in Hardware Engineering | 3 Months | 10,000 | 2,000 |
| Diploma in Auto CAD | 3 Months | 10,000 | 2,000 |
| Diploma in Microsoft office | 3 Months | | 1,500 |
| Accounting Package | 3 Months | 10,750 | 2,150 |

50% OFF ADVANCE COURSES

| Course | Old Fee | New Fee |
|---|---|---|
| Diploma In Multimedia | 5500 | 2750 |
| Diploma In Video Editing | 6500 | 3250 |

வகுப்புக்கள் ஆரம்பம் :

Batch I :20/06/20089 AM
Batch II :21/06/20089 AM
Batch III :22/06/20089 AM
Batch IV :25/06/20089 AM

கம்யூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் ... நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். வரையறுக்கப்படாத செய்முறைப்பயிற்சி.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கின்னஸ் சாதனையில் மேலும் நான்கு அதிசயங்கள்

உலக சாதனைகள் பதிவு செய்யப்படும் "கின்னஸ்" பதிவேட்டில் புதிதாகப் பதிவாகியுள்ள நான்கு விடயங்கள் இன்றைய 'புதன் பொய்கை' யில் இடம்பிடித்துள்ளன.


## உலகிலேயே விசாலமான விளையாட்டு மைதானம்



உலகிலேயே விசாலமான விளையாட்டு மைதானம். பிரேஸில் நாட்டின் 'மரகானா' விளையாட்டு மைதானம். 'எஸ்டாடியோ வூ மரகானா' விளையாட்டு மைதானம் என அழைக்கப்படும் இந்த மைதானம், பிரேஸில் நாட்டின் 'ரையோடி ஜெனரோ' நகரத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. உலகிலேயே இது வரையில் உருவாக்கப்பட்ட விளையாட்டு மைதானங் களில் மிகப் பெரியதும் விசாலமானதுமான இந்த மைதானம், உலகில் அதி கூடிய நவீன வசதிகளுடன் கூடிய மைதானமாக 'கின்னஸ் பதிவேட்டில்' இடம்பிடித்துள்ளளது. இரண்டு இலட்சம் பார்வையாளர்கள் ஒருசேர அமர்ந்து போட்டிகளைக் கண்டு களிக்கத்தக்க வசதிகள் இந்த மைதானத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 'ரையோடி ஜெனரோ' மாநில அரசுக்குச் சொந்தமான இந்த மைதானம் 1950 ஆம் ஆண்டில் முதன் முதலில் உருவாக்கப்பட்டது. பிபா (fifa) உலகக் கிண்ணக் கோப்பைக்கான கால்பந்துப் போட்டியை நடாத்துவதற்காகவே முதன் முதலில் இந்த மைதானம் உருவாக்கப்பட்டது. அந்த வேளை முதல் முக்கியமாக ரையோடிஜெனரோவில் முன்னணி கால்பந்து விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான கால்பந்து போட்டிகள் இம் மைதானத்திலேயே இடம் பெற்று வருகின்றன. 2014 ஆம் ஆண்டில் இடம் பெறவுள்ள பிபா (fifa) உலகக்கிண்ணக் கால்பந்துப் போட்டித்தொடரின் இறுதிப்போட்டி இம்மைதானத்திலேயே இடம்பெறவுள்ளது.

## உலகிலேயே விசாலமான றோமன் கத்தோலிக்க தேவாலயம்

'யொமுஸ்யோர்க்ரோ'வில் அமைந்துள்ள பசிலிகா தேவாலயம் உலகிலேயே மிக விசாலமான றோமன் கத்தோலிக்க தேவாலயமாக கொள்ளப்படுகிறது. இத் தேவாலயம் அமைந்துள்ள 'யொமுஸ்யோர்க்ரோ' நகரம் ஐஸ்வரிகோஸ்ட்டின் நிர்வாகத் தலைநகரமுமாகும். இது 1985 முதல் 1989 ஆம் ஆண்டு வரையான 4 ஆண்டுகள் காலத்தில் கட்டி முடிக்கப்பட்டது. இதனைக் கட்டிமுடிக்க 300 மில்லியன் டொலர் பணம் செலவிடப்பட்டது. இத் தேவாலயத்தினுள்ளே ஒரே சமயத்தில் 18 ஆயிரம் பேர் அமர்ந்து பிரார்த்தனையில் ஈடுபட இயலும். இத் தேவாலயத்தின் வெளிப்புறத்தில் ஒரு இலட்சம் பேர் ஒரே சமயத்தில் ஒன்று கூடத்தக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன.



## உலகில் அதியுயர்ந்த உருவச் சிலை



பிரேசிலின் 'ரையோடிஜெனரோ' நகரத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள யேசுபெருமானின் சிலையே இன்று உலகில் அதி உயரமான உருவச்சிலை என்ற தகவல் 'கின்னஸ்' உலக சாதனைப் பதிவேட்டில் பதிவாகியுள்ளது. இதன் உயரம் 39.6 மீற்றர்களாகும் (130 அடி) இதன் எடை 700 தொன்னாகும். நில மட்டத்திலிருந்து 700 மீற்றர் உயரமான மலைப்பாங்கான இடமான 'கொர்கவாடோ' என்ற இடத்தில் இது நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்தச் சிலையை நிர்மாணிக்க 1922 முதல் 1931 வரையான 9 ஆண்டுகள் காலம் செலவிடப்பட்டது. 1931 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 12 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்ட இவ் உருவச்சிலையை நிர்மாணிக்க அந்த வேளையில் 2 இலட்சத்து 50 ஆயிரம் டொலர் பணம் செலவிடப்பட்டது. கடந்த காலத்தில் அதிசயங்களாக அடையாளப்படுத்தப்பட்ட ஏழு அதிசயங்களில் இந்த உருவச்சிலையும் ஒன்றாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

## உலகிலேயே விசாலமான இஸ்லாமிய வணக்கத்தலம்



பாகிஸ்தானின் 'இஸ்லாமாபாத்' நகரில் அமைந்துள்ள ஷா பஸால் முஸ்லிம் வணக்கத்தலமே உலகில் விசாலமான இஸ்லாமிய வணக்கத் தலமாக 'கின்னஸ்' உலக சாதனைப் பதிவேட்டில் இடம் பிடித்துள்ளது. இது பாகிஸ்தானின் தேசிய வணக்கத் தலமாக கருதப்படுகிறது. இதுஇஸ்லாமிய மதத்தவர் மத்தியில் பிரபல்யமான வணக்கத்தலமாகத் திகழ்கிறது. இதன் விசாலத்தைப் போன்றே இங்கு கூடும் இஸ்லாமிய யாத்திரீகர்கள் தொகையிலும் இது முன்னிலை வகிக்கிறது. 5 ஆயிரம் சதுர மீற்றர் அளவு கொண்ட பிரார்த்தனைக் கூடத்தை உள்ளடக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள இவ் வணக்கத் தலத்தில் ஒரே சமயத்தில் 3 இலட்சம் யாத்திரீகர்கள் தங்கத்தக்க வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- தொகுப்பு: ராஜா

## ஏமாற்றம்

இன்னமும் பத்திரிகைகளில்
வேலைவாய்ப்பு விண்ணப்பங்கள்
தேடிக்கொண்டே இருக்கின்றேன் -ஆனால்
ஒரே ஒரு வேலை மட்டும்
காத்துக்கொண்டே இருக்கின்றது
'மணமகன் தேவை'

வி.முகிலன்
நெடுந்தீவு-13

## யாவும் கற்பனை

பூமியின் ஒவ்வொரு
விடியலும்
அமைதியின் பூபாளத்தோடு
அரங்கேற்றம்

பீரங்கி ஓசைகளும்
வேட்டுச் சத்தங்களும்
எங்கோ காணாமல் போய்விட
வானம் முழுவதும்
வெள்ளைப் புறாக்கள்
சிறகடிக்கும் ஓசை

எல்லோரும் ஒரே இனம்
அது மனித இனம்
அரசாங்கங்களின்
கொள்கைப் பிரகடனம்

உலகமே ஆனந்தப் பூங்காற்று
வீசும் அழகிய நந்தவனமாய்
இனி துயரேதுமில்லை
இன்ப வாழ்வின் மகிழ்வு
இவை யாவும் கற்பனை
கேளுங்கோ.....!

ந. ராஜி
கொடிகாமம் வடக்கு.

## மரங்களில் 'இராட்சதன்' ஆலமரம்



ஆலமரம் ஒரு விசாலமான மரமாகும். மரங்களின் 'இராட்சதன்' என்று இம் மரத்தைக் கூறுவார்கள்.

இயற்கையில் 'இராட்சத' உருவமுள்ள எல்லாமே பிரச்சினைகளுக்குள்ளாவது வழக்கமே. எனவே ஆலமரங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. உதாரணமாக ஒரு விசாலமான (இராட்சத) மரமானது தனது வேர்களிலிருந்து ஈரத்தன்மையை (நீரை) மேலே ஈர்த்துக் கொள்வதற்கு பெரிதும் சிரமப்படநேரிடும். அதற்கு மரத்தின் தண்டுப்பகுதி பலம் பொருந்தியதாய் இருக்க வேண்டும். மரம் மிக உயரமாக வளர்ந்து விட்ட பிறகும் மென்மையானதாக இருக்க முடியாது. இல்லையென்றால் அது முறிந்துவிடும். எனவே ஒரு விசாலமான மரத்தின் அடிப்பாகம் அகன்று இருந்தால் மட்டுமே மேலே உள்ள பாரத்தை இலகுவாக சுமக்க முடியும். மேலும் கிளைகள் அகன்றும் பாரமாகவும்மிருப்பின் மரத்தை அவை ஏதாவது ஒரு பக்கத்திற்கு இழுத்து விடு வதாய் அமையும்.

இம் மாதிரி பிரச்சினைகளை மிக இலகுவாகத் தீர்த்துக் கொண்டுள்ள மரம்தான் ஆலமரம். முசுக்கட்டை (MULBERRY) இனத்தைச் சேர்ந்த இம் மரங்கள் இந்தியா, மலேசியா போன்ற ஆசிய நாடுகளில் அதிகமாகக் காணப்படுகின்றன.

ஏனைய மரங்களில் போலில்லாமல் வழக்கத்துக்கு மாறான ஒரு தன்மை இந்த மரத்தில் என்னவென்றால் அதன் கிளைகள் வளரும் முறையாகும். மரத்தைச் சுற்றிலும் கிளைகள் பல திசைகளிலும் வெளிப்படும். அவை பெரிதாகவிருந்தாலும், மரத்தின் தண்டு பெரிதாகவிருந்தாலும் இக்கிளைகளை அதனால் தாங்கிக் கொள்ள முடியாது. எனவே கிளைகளின் அடிப்பகுதியிலிருந்து வேர்கள் வெடித்து நிலத்தை நோக்கி (விழுதுகள்) இறங்குகின்றன. நிலத்தில் ஊன்றி நிலைபெற்றதும் அவை கிளைகளைத் தாங்கிக் கொள்வதுடன் மரத்துக்குத் தேவையான நீரையும் சத்துக்களையும் உறிஞ்சி எடுத்துக் கொள்கின்றன. அத்துடன் அவையே புதிய தண்டுகளாக அமைந்து விடுகின்றன. இதனால் ஆலமரமானது உயரத்தை விட அகலத்தில் விசாலமாகி விடுகின்றது. இவ்வாறு அகன்றுவிடும் ஆலமரமானது சில சமயங்களில் 450 மீற்றர் சுற்றுவிட்டத்தைக் கொண்டதாகவும் அமைந்து விடுவதுண்டு.

ஆலமரத்தின் விழுதுகள் கூடாரங்களுக்கு ஊன்று தடிகளாகப் பயன்படுத்தப்படுவதுண்டு. விழுது நார்களைக் கொண்டு கயிறு திரிக்கப்படுவதுண்டு.

ஆலமரத்தில் சிறிய கனிகள் தோன்றும். சிவப்புநிறமான இக்கனிகள் பறவைகளுக்கும் வௌவால்களுக்கும் இரையாகின்றன.

ஆலமரம் விழுதுகள் விட்டு விசாலமடையும் போது அங்கு காணப்படும் ஏனைய மரங்கள் விழுதுகளுக்கிடையில் சிக்கி காலப்போக்கில் அழிந்து விடும்.

புதன் பொய்கை

விழுதுகளுக்கிடையில் சிக்கிக் கொள்ளும் மரங்கள் எதுவானாலும் அவைகளால் நசுக்குண்டு அழிந்து போகும்- அவ்வாறு அழிந்து போகும் மரங்களின் எஞ்சிய பகுதிகள் விழுதுகளின் இடைகளில் தூள் நிலையில் அல்லது காய்ந்த துண்டங்களாகக் காணப்படுவதுண்டு. (ரமேஷ்).


## உலோகம் - அது என்ன!

உலோகம் (metal) என்றால் என்ன? உலோகம் என்பதை வரையறுத்துக் கூறுவது இலகுவான காரியம் அல்ல. ஒரு பொருள் என்ற முறையில் உலோகம் என்பது பிரகாசமானதொன்று. அத்துடன் வெப்பம் மற்றும் மின்சாரத்தை சுலபமாகக் கடத்துகின்ற ஒன்றுமாகும். சுத்தியலால் தட்டியும் சுருட்டியும் வைக்கக் கூடியதாயும் நீள வயர்கள் போன்று நீட்டக்கூடியதாகவும் இருப்பது மட்டுமன்றி கடினமாகவும் திடப் பொருளாகவும் இவை காணப்படுகின்றன.

உலோகங்கள் ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில் உருகக் கூடியவையாகவும் இருக்கும். அதே வேளை வேறு உலோ கங்களுடன் இலகுவில் ஒன்றாகக் கலக்கும் தன்மையும் கொண்டவை. (பாதரசம்) மர்குரியைத் தவிர ஏனைய உலோகங்கள் யாவும் சாதாரண வெப்பநிலையில் கெட்டியாகவே இருக்கும்.

சில உலோகங்கள் பரிசுத்தமான நிலையிலேயே காணப்படும். ஆனால் பெரும்பாலானவை வேறு பொருள்களுடன் கலந்தே இருக்கின்றன.

இந்த உலோகங்கள் சல்ப்பைட்ஸ் (Sulphides) ஒக்சைட்ஸ் (oxides) [illegible] மற்றும் சிலிக்கேட்ஸ் (silicates) என்பனவாகும். இவை பெரும்பாலும் [illegible] போன்ற பொருள்களுடன் கலந்து காணப்படும். கனிமப்பொருள்களுடன் பெரும்பாலும் கலந்து காணப்படுவன ஈயம் (lead) சிங்க் (zinc) இரும்பு (iron) செம்பு (copper) குரோமியம் (cromium) நிக்கல் (Nickel) மற்றும் பாதரசம் (mercury) போன்றனவாகும்.



சில உலோகங்கள் மிகமிக அரிதாகவே கிடைக்கின்றன. அதனால் தொன் கணக்கில் கனிமங்களைப் பயன்படுத்தினால்தான் சிறு அளவில் சுத்தமான உலோத்தைப் பெறமுடியும். றேடியம்(Rodium) என்பது இவைகளில் ஒன்று.

கனிமப் பொருள்களிலிருந்து உலோகங்களைப் பிரித்து எடுக்கும் விஞ்ஞான முறைக்கு மெட்டலர்ஜி (Metallurgy) என்று பெயர்.

அநேகமான உலோகங்கள் சுத்தமான நிலையிலிருக்கும் போது அன்றி கலப்படமாகவே பயன்படுத்தப்படுகின்றன. அந்த வகையில் வெள்ளிகரண்டிகள், பொற்காசுகள், அலுமினியப் பாத்திரங்களைக் குறிப்பிடலாம்.

சுத்தமான இரும்பானது பெறுமதியாகப் பயன்படுவதற்கு உருக்காக மாற்றப் படுகின்றது. இது ஒரு கலப்பட உலோகமாகும்.


மனிதர் உட்பட விலங்குகளுக்கும் சில உலோகங்கள் சிறிய அளவில் தேவைப்படுகின்றன. அவை யாவன. இரும்பு, பொட்டாசியம், கல்சியம், மக்னீசியம் மற்றும் சோடியம் என்பனவாம். மனித [illegible] அளவில் செப்பு, அலுமினியம், மக்னீசியம் போன்ற உலோகங்கள் தேவைப்படுகின்றன. (ராம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உதயனின் விசேட ஆசிரியர் குழாமின் தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் இலகுவழிப் பயிற்சி

*முதலாம், இரண்டாம் வினாக்களில் தரப்பட்ட படத்திற்கு பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.*

01) 
1. பாடுதல்
2. பார்த்தல்
3. நடித்தல்
4. உரையாடுதல்

02) 
1. பாடுகிறார்
2. ஆடுகிறார்
3. பாய்கிறார்
4. ஓடுகிறார்

*கீழே தரப்பட்ட பகுதியை வாசித்து விடையளியுங்கள்.*

''நீங்கள் எல்லோரும் இதுவரை படித்த பாடங்களை மீட்டுப் படியுங்கள். கடந்த வாரம் படித்த பாடங்களை நன்றாகப் படியுங்கள்'' என்று வகுப்பாசிரியர் கூறினார்.


03) இந்த அறிவுறுத்தல் வகுப்பாசிரியரால் எங்கு வைத்துக் கூறப்பட்டிருக்கும்?
1. அதிபர் அலுவலகத்தில் 2. விளையாட்டு மைதானத்தில்
3. வகுப்பறையில் 4. பரீட்சை மண்டபத்தில்


04) இந்த அறிவுறுத்தல் எதற்காக ஆசிரியரால் கூறப்பட்டிருக்கும்?
1. விடுமுறை தருவதற்காக 2. புதிய பாடத்தைப் படிப்பதற்காக
3. வகுப்பேற்றம் செய்வதற்காக 4. பரீட்சைக்கு ஆயத்தம் செய்வதற்காக

05) இந்த அறிவித்தலை வழங்கியதன் நோக்கம்
1. ஆசிகூறல் 2. புத்திமதி கூறல்
3. குறை கூறல் 4. வெகுமதி வழங்கல்

06) காலம் படிப்படியாகக் குறைந்து செல்லும் ஒழுங்கில் எழுதப்பட்டுள்ள முறை.
1.வருடம், மாதம், மணி, நாள், செக்கன் 2. ஆண்டு, மாதம், வாரம், நாள், மணி
3. செக்கன், நிமிடம், மணி, நாள், வாரம் 4. வாரம், நாள், மணி, வருடம், நிமிடம்

07) குடும்பத்தினரின் வயது அடிப்படையில் கூடிச்செல்லும் ஒழுங்கு.
1. தங்கை, நான், அண்ணா, அப்பா, பாட்டன்
2. அண்ணா, நான், அப்பா, தங்கை, பாட்டன்
3. பாட்டன், அப்பா, அண்ணா, நான், தம்பி
4. தங்கை, தம்பி, அண்ணா, நான், அப்பா

08) 5675 என்னும் எண் எழுதப்பட்டுள்ள குறியீட்டைத் தெரிவு செய்க.


09) ''பகலவன்'' என்னும் சொல் எழுதப்பட்டுள்ள குறியீட்டைத் தெரிவுசெய்க.


10) இருபது ரூபாவை மாற்றக் கூடிய சரியான முறை யாது?

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 10 ரூபா | + | 5 ரூபா | + | 5 ரூபா | + | 1 ரூபா |
| 2. | 10 ரூபா | + | 2ரூபா | + | 2 ரூபா | + | 1 ரூபா |
| 3. | 5 ரூபா | + | 5 ரூபா | + | 5 ரூபா | + | 10 ரூபா |
| 4. | 5 ரூபா | + | 5 ரூபா | + | 5 ரூபா | + | 5 ரூபா |


11) எண் கோலங்கள் அமைந்த ஒழுங்கில் எண்களின் வரிசையில் இறுதியாக உள்ள இடத்திற்கு இட வேண்டிய எண் யாது?


1. 58 2. 66 3. 70 4. 82

12) பின்வரும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி தம்பி எந்த மாதத்தில் ஊருக்குச் செல்ல இருக்கின்றான்.

> ஓகஸ்ட் 23
> அண்ணா,
> நான் எதிர்வரும் மாதம்
> ஊருக்கு வருகின்றேன்.
> இப்படிக்கு,
> அன்புத்தம்பி.

1. மே 2. செப்ரெம்பர் 3. ஒக்ரோபர் 4. டிசெம்பர்

13) இங்கு கீழே தரப்பட்டுள்ள குவியலில் இருக்கும் செங்கற்களின் தொகையை எவ்வாறு கண்டுபிடிக்கலாம்?

1. 3 + 4 2. 3 - 4 3. 3 / 4 4. 3 x 4

14) கீழே தரப்பட்டுள்ள கடிகாரத்தைப் பார்த்துச் சசி பின்வருமாறு கூறினாள். '' நான் சரியாக 2 மணித்தியாலம் தூங்கி விட்டேன்''. உண்மையில் அவள் எத்தனை மணிக்குத் தூங்கத் தொடங்கினாள்?

1. 3.30 2. 6.15
3. 1.30 4. 2.15

15) மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நடத்தப்படுகிறது. இக்கூற்று
1. ஓர் அபிப்பிராயமாகும் 2. ஓர் உண்மையாகும். 3. ஓர் ஆலோசனையாகும்

16) சென்ற உலகக் கோப்பைப் போட்டிகளில் விளையாடியதிலும் பார்க்க எதிர்வரும் உலகக்கோப்பைப் போட்டியில் இலங்கைக் கிரிக்கெட் அணி சிறப்பாக விளையாடும் போல் தோன்றுகிறது. இக்கூற்று
1. ஓர் அபிப்பிராயமாகும் 2. ஓர் உண்மையாகும் 3. ஓர் ஆலோசனையாகும்

17) பாடசாலை விழா ஒன்றுக்கான நிகழ்ச்சி நிரலின் விடயங்கள் சில ஒழுங்கு மாற்றப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.
A- அதிபர் உரை B- வரவேற்புரை C- [illegible]
D- அதிதிகளின் வருகை E-பரிசில் வழங்கல் F-பிரதம அதிதியின் உரை

நிகழ்ச்சி நிரலின் சரியான ஒழுங்கைக் காட்டும் விடை யாது?
1. BDCAEF 2. ACEFDB 3.DBAFEC

18. கீழே மாணவன் ஒருவன் பாடசாலை சென்று படிக்கும் வரையிலான செயற்பாடுகள் ஒழுங்கு மாற்றித் தரப்பட்டுள்ளன.
(அ) சாப்பிடுதல் (ஆ) பாடம் படித்தல்
(இ) குளித்தல் (ஈ) பாடசாலை போதல்
(உ) படுக்கையால் எழுதல்
1. உ, அ, இ, ஆ, ஈ 2. உ, இ, ஆ, ஈ, அ
3. உ, இ, அ, ஈ, ஆ

19) நிமலினதும், விமலினதும் நிறைகளின் கூட்டுத் தொகை 41 kg ஆகும். நிமல், விமல், கமல் ஆகியோரது நிறைகளின் கூட்டுத்தொகை 67kg ஆகும். கமலின் நிறை எத்தனை கிலோகிராமாகும்?
1. 20 kg 2. 21kg 3. 26kg 4. 28kg

20) ஒரு பையில் 3 மஞ்சள் நிறப்பந்துகளும், 5 சிவப்பு நிறப்பந்துகளும் உள்ளன. ஒரு மஞ்சள் நிறப்பந்தினைப் பெற்றுக் கொள்வதற்குப் பையிலிருந்து ஆகக்குறைந்த எண்ணிக்கையாக எத்தனை பந்துகள் வெளியே எடுக்கப்பட வேண்டும்?
1. 1 2. 3 3. 5 4. 6

*✱கீழே தரப்பட்டுள்ள சொற்கூட்டங்கள் ஒவ்வொன்றும் உணர்த்துகின்ற கருத்தைத் தரும் தனிச்சொல்லைத் தெரிவு செய்க.*

21) ஆகாயமும் கடலும் ஒன்றையொன்று தொடுவதாகத் தோன்றும் கோடு.
1.சமுத்திரம் 2.அடிவானம் 3.கடற்கரை

22) கப்பல்கள் நங்கூரமிடப்பட்டிருக்கும் இடம்
1. துறைமுகம் 2. கடற்கரை 3. ஏரி

23) வாசிப்பதற்கென புத்தகங்கள் அடுக்கிவைக்கப்பட்டிருக்கும் இடம்
1. கடை 2. நூலகம் 3. களஞ்சியசாலை

24) கணித பாடத்திலான 6 மாதாந்தச் சோதனைகளில் தரம் 5 மாணவன் ஒருவன் பெற்றுக் கொண்ட புள்ளிகள் பின்வருமாறு:
36, 44, 40, 48, 44, 52
அடுத்த மாதாந்த சோதனையில் அவன் பெற்றிருக்கக் கூடிய புள்ளி யாது?
1. 46 2. 48 3. 56 4. 58


25) கீழே உருவில் தரப்பட்டுள்ள பிராணியை நன்கு விவரிக்கும் விடையைத் தெரிவு செய்க.


1. வீட்டில் வசிக்கும், தாவர உணவுகளை மட்டும் உண்ணும்.
2. நான்கு கால்களையும் இரண்டு கொம்புகளையும் உடையது.
3. வீட்டில் வசிக்கும், வாலை ஆட்டும்.

26) காது- வானொலி அதுபோல கண்-...............
1. தொலைபேசி 2. தொலைக்காட்சி 3. ஒலிபெருக்கி

27) தாய்- மகள் அதுபோல் தந்தை-...............
1. ஆண் 2.தம்பி 3. மகன்

*✱ 28 ஆம், 29 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள உருக்களிடையே ஒத்த இரண்டு உருக்களைக் குறிக்கும் எழுத்துக்கள் உள்ள விடையை தெரிவு செய்க.*

28) 
A B C D
1.A உம் C உம் 2.B உம் D உம் 3. A உம்D உம்

29) 
A B C D
1.A உம் B உம் 2. A உம்D உம் 3. C உம்D உம்

*✱30ஆம், 31 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள கூடுகள் குறுக்காகவும் மேலிருந்து கீழாகவும் மூன்று எழுத்துக்கள் கொண்ட மூன்று சொற்கள் உருவாகும் வகையில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.*

30)

| | | |
|---|---|---|
| அ | - | து |
| சோ | - | ம் |
| கு | - | பி |

1. மு ட ம் 2. மு க ம் 3. மு க வை

31)

| | | |
|---|---|---|
| உ | ம | து |
| - | - | - |
| வ | ம் | பு |

1. தவம் 2. தகுதி 3. தரம்

*✱32 ஆம் 33 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களை வாக்கியங்களில் எவ்விதத்தில் பயன்படுத்தலாம் என்பதைக் குறிக்கும் விடையை தெரிவு செய்க.*

32) சின்ன, வண்ண, நல்ல
1. அடைமொழியாக 2. பெயர்ச்சொல்லாக 3. வினைமுற்றாக


33) ஓடுக, படித்தான், பறந்தது
1. அடைமொழியாக 2. பெயர்ச்சொல்லாக 3. வினைமுற்றாக

*34 ஆம், 35 ஆம் வினாக்களில் ஐந்து நிகழ்வுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந் நிகழ்வுத் தொடர்கள் குறிப்பிட்ட சந்தர்ப்பம் ஒன்றைக் காட்டுகின்றன. இவை சரியான ஒழுங்கு வரிசையில் காணப்படவில்லை. இந்த நிகழ்வுகளை ஒழுங்கு வரிசைப்படுத்தும் போது 4ஆவது இடத்தில் வரும் நிகழ்வைக்குறிக்கும் விடையின் கீழ் கோடிடுக.*

34) ஒரு சிறிய பிள்ளை கள்ளங்கபடமற்ற மனிதன் ஒருவனுக்கு உதவிசெய்கின்றது.
A -வீதியோ[illegible]த்தில் முதியவர் ஒருவர் இருப்பதைக் காணுகின்றான்.
B -நேசன் மதிய உணவுக்கான தனது சோற்றுப் பார்சலை அவருக்குக் கொடுக்கின்றான்.
C -நேசன் பாடசாலை செல்லப் புறப்படுகின்றான்.
D - முதியவர் உணவு கேட்கின்றார்.
E -முதியவர் அவனுக்கு ஆசீர்வாதம் செய்கின்றார்.
1. A 2. B 3. C 4. D

35) பெற்றோரின் பாதங்களை வணங்கிய பின்னர் ஒரு சிறுபிள்ளை பாடசாலை செல்லப் புறப்படுகின்றது.
A -ஆடை அணிகள் அணிகின்றான்.
B - அதிகாலை எழுகின்றான்.
C- புத்தகங்களைத் தயார்ப்படுத்துகின்றான்.
D - பெற்றோரின் பாதங்களை வணங்குகின்றான்.
E- முகம் கழுவுகின்றான்.
1. A 2. B 3. C 4. D

*36 ஆம் ,37 ஆம் வினாக்களிலுள்ள படங்களின் சரியான ஒழுங்குமுறையைக் காட்டுகின்ற விடையை தெரிவு செய்க.*


A B C D
1. BCDA 2.CABD 3. BDCA 4. ADCB

(8ஆம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டநிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள்.

கழக வீரர்கள் மனோகரா சனசமூக நிலையத் தலைவர் ந.துரைராஜாவால் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலனுக்கு அறிமுகம் செய்து வைக்கப்படுவதை முதலாவது படத்திலும் போட்டிகளின் சில காட்சிகளை அடுத்த இரண்டு படங்களிலும் காணலாம்.

இச்சுற்றுப்போட்டியில் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்ட வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக வீரர்கள் கரவெட்டிப் பிரதேச செயலரிடமிருந்து வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக் கொள்வதை கடைசிப் படத்தில் காணலாம்.

(படங்கள்: சுந்தா)

# பாடசாலைகள் சம்மேளன உதைபந்தாட்டம்: வலிகாமத்தில் மானிப்பாய் இந்து கேடயம் பெற்றது



வலி.வடக்கு,ஜூன்18

இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் யாழ்.மாவட்டத்தில் வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே ஈ.எஸ்.பேரம்பலம் சக நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட 17 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி வலிகாமம் கல்வி வலய சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டி தொடங்கியபோது இருந்த வேகம் இரு அணிகளிடமும் தொடர்ந்து போட்டியில் காணப்படவில்லை. தொடர்ந்து மானிப்பாய் இந்துக் கல்லூரியே மைதானத்தில் தனது ஆதிக்கத்தைச் செலுத்தியது.

மகாஜனாக் கல்லூரி அணியைப் பொறுத்தவரையில் ஆரம்பத்தில் தடுத்து விளையாடியதுடன் கோல்கள் பெறும் முயற்சியிலும் ஈடுபட்டது. இந்நிலையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி தனது முதலாவது கோலைப் பெற்றுக்கொண்டது.

தொடர்ந்து மானிப்பாய் இந்துக் கல்லூரி உற்சாகத்துடன் கோல்கள் பெறும் முயற்சியில் ஈடுபட்டு ஆட்டம் நிறைவு



பெற்றபோது 4:0 என்ற கோல் கணக்கில் மகாஜனாக் கல்லூரியை வென்று வலிகாமம் கல்வி வலய சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயமும் மோதிக் கொண்டன. இதில் யூனியன் கல்லூரி 3:0 என்ற கோல் கணக்கில் ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தை வெற்றிகொண்டு மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகள் மாவட்ட மட்டத்தில் இடம் பெறும் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (1-86)

## தென்மராட்சி வலய உடற்பயிற்சிப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்18

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் வலய மட்ட 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள் அண்மையில் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றன.

போட்டி முடிவுகள் வருமாறு:

*ஆண்கள்:* கைதடி நவீல்ட் பாடசாலை, மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை.

*பெண்கள்:* சாவகச்சேரி மகளிர் கல்லூரி, கைதடி நவீல்ட் பாடசாலை, கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை. (1-207)

## ஏழாலை றோயல் 'தூய ஒளி' கிண்ணத்தைச் சுவீகரித்தது

குருநகர்,ஜூன்18

1986ஆம் ஆண்டில் மண்டைதீவுக் கடற்பரப்பில் படுகொலை செய்யப்பட்ட 31 குருநகர் மீனவர்களின் ஞாபகார்த்தமாக குருநகரில் நடத்தப்பட்ட 'தூய ஒளி' வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் ஏழாலை றோயல் விளையாட்டுக் கழகம் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை 1:0 என்ற கோலால் வெற்றியீட்டி தூய ஒளி வெற்றிக் கிண்ணத்தை தட்டிச் சென்றது.

இந்த இறுதிப்போட்டி கடந்த 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை குருநகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. (1-51)

# மகளிர் கரப்பந்தாட்டம் சமநிலையில் முடிந்தது

வலி.வடக்கு,ஜூன்18

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையே இடம்பெற்ற பெரு விளையாட்டுக்கள் மற்றும் தடகளப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழாவின்போது, 19 வயதுப் பிரிவு யாழ். மாவட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்ட பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிக்கும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற கரப்பந்தாட்டப் போட்டி சமநிலையில் முடிவுற்றது.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்ற காட்சியாட்டத்தை பல நூற்றுக்கணக்கான வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்கள் கண்டுகளித்தார்கள்.

இரண்டு சுற்றுக்கள் கொண்ட இப்போட்டியில் முதல் சுற்றை யூனியன் கல்லூரி 25:19 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

இரண்டாவது சுற்றை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி 25:18 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

இரு அணிகளும் தலா ஒரு சுற்றை வெற்றிபெற்றமையால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. (1-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# மாகாண மட்டத்திலான விளையாட்டுப் போட்டி: அமைச்சர் தலைமையில் இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்18

வட மாகாணப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெறவுள்ள விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்வதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள யாழ்.மாணவ, மாணவிகள், அவர்களது பெற்றோர்கள், ஆசிரியர்கள், கல்விப்பணிப்பாளர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளவிருக்கிறார்.

மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் மாணவ, மாணவிகளின் பிரச்சினைகள் தொடர்பாகக் கேட்டறியும் அமைச்சர், அவர்களின் பயண ஏற்பாடுகள் மற்றும் வசதிகள் குறித்து விளக்கமளிப்பார் எனத் தெரிவிக்கப்பட்டது. (1)

# வலி.வடக்கு இளைஞர் கழக தடகளப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்18

யாழ்.மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தினால் வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட தடகளப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

போட்டி முடிவுகளின் ஒரு பகுதி 16.06.2008 உதயனில் வெளியாகியிருந்தது.

எஞ்சிய முடிவுகள் வருமாறு:

**13 வயதுப் பிரிவு - ஆண்கள்**

*100 மீற்றர் ஓட்டம்:* ம.கோகில்தாசன் (விநாயகர்), எஸ்.அனிஸ்ரன் (சன்மார்க்கம்), கோ.கனதீபன் (விநாயகர்).

*200 மீற்றர் ஓட்டம்:* எஸ்.அனிஸ்ரன் (சன்மார்க்கம்), ப.பார்த்தீபன் (பாரதிதாசன்), து.தனுசன் (விநாயகர்).

*400 மீற்றர் ஓட்டம் :* எஸ்.அனிஸ்ரன் (சன்மார்க்கம்), உ.அகிலன் (விநாயகர்), ப.பார்த்தீபன் (பாரதிதாசன்).

*800 மீற்றர் ஓட்டம்:* ப.பிரதீபன் (விநாயகர்), செ.தவச்செல்வன் (வெண்புறா), து.தனுசன் (விநாயகர்).

*1500 மீற்றர் ஓட்டம்:* ப.பிரதீபன் (விநாயகர்), செ.தவச்செல்வன் (வெண்புறா), பு.மிரேஷ் (சன்மார்க்கம்).

*10000 மீற்றர் ஓட்டம்:* ப.பிரதீபன் (விநாயகர்), ச.சஞ்சீவ் (கணேசன்), சி.சிவசாந்தன் (சன்மார்க்கம்).

*நீளம் பாய்தல்:* ம.கோகுலதாஸ் (விநாயகர்), ச.லயிசன் (விநாயகர்), ரயிந்தன் (சன்மார்க்கம்).

*உயரம் பாய்தல்:* மு.கிருஷ்ணா (கணேசன்), பி.நியூட்டன் (வெண்புறா), அ.லியோ மக்கிமஸ் (வெண்புறா).

*தத்தி மிதித்துப் பாய்தல்:* ம.கோகுலதாஸ் (விநாயகர்), ச.லயிஷன் (விநாயகர்), க.ரயித்தன் (சன்மார்க்கம்).

*தட்டெறிதல்:* ம.பார்த்தீபன் (கணேசன்), ம.கஜதீபன் (கணேசன்), தே.றொனி ஜெனார்த்தனன் (விநாயகர்).

*ஈட்டி எறிதல்:* இ.கஜந்தன் (இளங்கதிர்), ம.பார்த்தீபன் (கணேசன்), ச.லக்ஷன் (வெண்புறா).

*குண்டெறிதல்:* ம.பார்த்தீபன் (கணேசன்), ச.லக்ஷன் (வெண்புறா), தே.றொனி ஜெனார்த்தனன் (விநாயகர்).

*5000 மீற்றர் வேகநடை:* தி.ஜெனாகரன் (விநாயகர்), உ.அகிலன் (விநாயகர்).

*அஞ்சலோட்டம் 4 X 100 மீற்றர்:* அளவெட்டி விநாயகர் இ.சே.மன்றம், மல்லாகம் சன்மார்க்க இ.சே.மன்றம், அளவெட்டி பாரதிதாசன் இ.சே.மன்றம்.

*4 X 400 மீற்றர் :* அளவெட்டி விநாயகர் இ.சே.மன்றம், மல்லாகம் சன்மார்க்க இ.சே. மன்றம், அளவெட்டி பாரதிதாசன் இ.சே. மன்றம்.

**13 வயதுப் பிரிவு - பெண்கள்**

*100 மீற்றர் ஓட்டம் :* இ.யக்சனா (விநாயகர்), சி.கஜானா (கணேசன்), தெ.சுகாஜினி (சன்மார்க்கம்).

*200 மீற்றர் ஓட்டம் :* சி.கஜானா (கணேசன்), மேரிறஜிதா (விநாயகர்), இ.யக்ஷனா (விநாயகர்)

*400 மீற்றர் ஓட்டம்:* வி.மோகனா (பாரதிதாசன்), தெ.சுதாஜினி (பாரதிதாசன்)

*800 மீற்றர் ஓட்டம் :* இ.காவேரி (விநாயகர்), இ.ராதிகா (பாரதிதாசன்).

*1500 மீற்றர் ஓட்டம் :* இ.காவேரி (விநாயகர்), வி.அஜித்தா (சன்மார்க்கம்), இ.ராதிகா (பாரதிதாசன்).

*3000 மீற்றர் ஓட்டம்:* இ.காவேரி (விநாயகர்), வி.அஜித்தா (சன்மார்க்கம்), கோ.வினுசியா (சன்மார்க்கம்).

*நீளம் பாய்தல்:* செ.கீர்த்திகா (கணேசன்), இ.யக்ஷனா (விநாயகர்), ச.தனுஷா (விநாயகர்).

*உயரம் பாய்தல் :* செ.கீர்த்திகா (கணேசன்), ச.தனுஷா (விநாயகர்), சி.கஜானா (கணேசன்).

*தத்தித் தத்திப் பாய்தல்:* ப.பிரியதர்ஷினி (விநாயகர்), ச.தனுஷா (விநாயகர்), க.கீர்த்தனா (சன்மார்க்கம்).

*தட்டெறிதல்:* செ.கீர்த்திகா (கணேசன்), ச.துஷிக்கா (கணேசன்), இ.றயிதா (பாரதிதாசன்).

*ஈட்டி எறிதல்:* சி.உதாசினி (திருவள்ளுவர்), இ.றஜிதா (பாரதிதாசன்), ச.சசிக்கா (கணேசன்).

*குண்டெறிதல்:* ச.சசிக்கா (கணேசன்), எம்.நிஷாந்தினி (பாரதிதாசன்), இ.றஜிதா (பாரதிதாசன்).

*3000 மீற்றர் வேகநடை:* த.ஜெனனி (விநாயகர்), த.சுவேந்தினி (திருவள்ளுவர்), கோ.துஷ்யந்தினி (திருவள்ளுவர்).

*அஞ்சலோட்டம் 4 X 100 மீற்றர்:* அளவெட்டி விநாயகர் இ.சே.மன்றம், அளவெட்டி இளங்கதிர் இ.சே.மன்றம், அளவெட்டி பாரதிதாசன் இ.சே.மன்றம்.

*4X400 மீற்றர் :* அளவெட்டி விநாயகர் இ.சே.மன்றம், அளவெட்டி பாரதிதாசன் இ.சே.மன்றம். (1-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



துர்க்கா துரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி அன்னை
**தங்கம்மா அப்பாக்குட்டி**
அவர்களின் மறைவு ஈடு செய்ய
முடியாததே. அன்னையின் தமிழ்ப் பணி,
சமயப்பணி மறக்க முடியாதது.
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு, ஆன்மா சாந்தியடைய
இறையருளைப் பிரார்த்திக்கின்றோம்.

**க.செல்வநாயகம் ஆச்சாரி**
**குடும்பத்தினர்.**

மடத்தடி, மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

(75441)

# ஆன்மீக அன்னைக்கு அகம் நெகிழ்ந்த அஞ்சலி



சைவமும் தமிழும் தழைத்தோங்க
அரும்பெரும் பணியாற்றிய அன்னை சிவத்தமிழ்ச் செல்வி
**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி**
அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி
அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(ச/553372)

**பூபாலசிங்கம் புத்தகசாலை,**
**இல.4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

# கண்ணீர் அஞ்சலி



சைவத்தையும் தமிழையும்
வளர்த்தெடுத்த
தன்னிகரில்லாத் தலைவி
**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி**
அவர்களுக்கு எமது கண்ணீர்
அஞ்சலிகள். அவரின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/தெல்லிப்பழை சைவப்பிரகாச
வித்தியாசாலை.

(75445)

# கண்ணீர் அஞ்சலி



சைவத்திற்கும் தமிழுக்கும்
மட்டுமன்றி சமூகத்திற்கும்
பெரும்பங்காற்றி அதன்
மறுமலர்ச்சிக்கு வித்திட்ட எமது
**அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி**
அவர்களுக்கு எமது
கண்ணீர்ப் பூக்களை
காணிக்கையாக்குகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சம்பியன் லேன்,
கொக்குவில்.

**வளர்மதி நிறை வாழ்வகம்,**
**கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம்.**

# பிரிய அன்னை தாளின் கீழ் பெறுவீர் சாந்தி!

மண்ணதனில் சைவமதும் தமிழு மோங்க
மாபெரிய நூலகங்கள் பிரசங் கங்கள்
கண்ணனைய மகளிரது கல்யா ணங்கள்
கவின் நூல்கள் வெளியீடு மணிவி ழாக்கள்
உண்ணெகிழு திருமுறைகள் உரைபு ராணம்
உலகத்தி லோங்க நிதி உவந்தே ஈயும்
பெண்ணெனஇங் குலவிவந்த பெருமாட் டியே
பிரிய அன்னை தாளின்கீழே பெறுவீர் சாந்தி!

பாரைநனி புரந்துவரும் பரையின் கோவிற்
பாங்காக ஏதிலிகள் முதியோர் தங்கள்
சீரை நிதம் பேணவொரு கோவி லாக்கி
சிறப்பொடவர் வாழவழி வகுத்துத் தந்தீர்
காரைநகர் மக்களுளக் கனிவோ டீந்தே
கண்யமடை சிவத்தமிழ்ச் செல்வி யாளே
பேரையளி மண்ணிருந்து பிரியா விடைநீர்
பெருகிடவே உமக்கீந் தோம் பெறுவீர் சாந்தி!

**க.கு.க.சிவபாலன்**
**(K.K.K.)**
**அடியாருக்கு அமுதளிக்கும்**
**அண்ணலாளர்.**

களபூமி,
காரைநகர்.

(75448)


## சமய சந்நிதிகளில்

கோப்பாய், ஜூன்18

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலய தீர்த்தத் திருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

(203-72)

* * *

கோப்பாய், ஜூன்18

நீர்வேலி செல்லக் கதிர்காம ஆலய தீர்த்தத் திருவிழா இன்று புதன்கிழமை 10 மணிக்கு இடம் பெறவுள்ளது.

(203-72)

* * *

யாழ்ப்பாணம், ஜூன்18

அராலி, வண்ணப்புரம் விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதர் ஆலய பிராயச்சித்த அபிஷேகம் நாளை வியாழக்கிழமை காலை 7 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

நடராஜப் பெருமான் ஆலய தூபிக்கும் வசந்தமண்டபத் தூபிக்கும் அபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து விநாயகர் ஏனைய மூர்த்திகளுக்கு விசேட பூசை, அபிஷேகம் இடம்பெறும்.

(203)

* * *

யாழ்ப்பாணம், ஜூன்18

அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசுவாமி ஆலய புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம்பெறவுள்ளது.

நாளை மறுதினம்வெள்ளிக்கிழமை சப்பரத் திருவிழாவும் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தேர்த்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழா இடம் பெறும். (202)

* * *

புலோலி குரும்பைகட்டி சாமுண்டிகா தேவி சமேத ஞானவைரவர் ஆலய வருடாந்த அபிஷேகம் கடந்த 14 ஆம் திகதி சனிக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை வளந்து கட்டி பொங்கல் இடம் பெற்று மறுநாள் 21 ஆம் திகதி சனிக் கிழமை நண்பகல் 12 மணிக்கு வேள்விப் பூசை நடைபெறும்.

அபிஷேகத்தின் இறுதிநாளான எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணி முதல் சகஸ்ர நாம சங்காபிஷேகமும் தொடர்ந்து மகேஸ்வர பூசையும், பிற்பகல் 5 மணிக்கு [illegible]

(203-236)

கல்விச் சுடர்.....


(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

37) தானியங்கள் நிரப்பப்பட்ட பாத்திரங்கள் சில இங்கு காட்டப்படுகின்றன. அவற்றினை அவதானித்துக் கூறக்கூடிய சரியான கருத்தைத் தெரிவு செய்க.




1. A இல் அதிகமான தானியங்கள் உள்ளன.
2. Bஇல் அதிகமான தானியங்கள் உள்ளன.
3. இரண்டிலும் சமஅளவான தானியங்கள் உள்ளன.

38) இங்கு நீர் உள்ள போத்தல்கள் சில காட்டப்படுகின்றன. இவற்றை அவதானித்துக் கூறக்கூடிய சரியான கருத்தைத் தெரிவு செய்க.



A B

1. A இல் அதிக நீர் உள்ளது.
2. Bஇல் அதிக நீர் உள்ளது.
3. இரண்டிலும் சம அளவாக நீர் உள்ளது.

39) வேறுபட்ட படத்தினை தெரிவு செய்க.



1 2 3 4

40) வேறுபட்ட படத்தினை தெரிவு செய்க.



1 2 3 4


# கண்ணீர் அஞ்சலி



சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி **தங்கம்மா அப்பாக்குட்டி**

சைவத்தமிழ் பேரரசி என யாழ்ப்பாணம் மாநகர சபையினால் பட்டமளித்து கௌரவிக்கப்பட்ட செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகவும் கவலை அடைகின்றோம். யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினது ஆரம்பம் முதல் இற்றை வரையான அதன் வளர்ச்சிக்குப் பல்வேறு வகையான உதவிகளை வழங்கி வந்தமையையும், மேற்படி குழுவினால் நல்லைக் கந்தனின் உற்சவக் காலத்தில் வருடா வருடம் வெளியிடப்படும் நல்லைக் குமரன் மலருக்கு ஆசியும் வாழ்த்தும் கூறியதோடு, அம்மலரின் முதற்பிரதியை பெற்றுவந்தமையையும் நன்றியோடு நினைவு கூர்ந்து அம்மாவின் ஆத்மா எல்லாம் வல்ல நல்லைக் கந்தனின் திருவடிகளில் சாந்தி பெற அவன்தாள் பணிகின்றோம்.

**சைவசமய விவகாரக் குழு, யாழ்.மாநகராட்சி மன்றம்.**

(ச/553377)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**அமரர் சிவஸ்ரீ கணபதிப்பிள்ளை அழகேந்திரம்**
(முன்னாள் உத்தியோகத்தர், இ.போ.ச., யாழ்.சாலை)
*அவதாரம்: 05.12.1943* *சிவபதம் : 19.05.2008*
திதி: பூரணை 18.06.2008

*பாரினில் பண்பாய் பாசமாய் பரஞ்சோதியாய்*
*பதிந்து விட்ட பாங்கான நெறிகளை புன்சிரிப்பால்*
*நாம் செய்வோமென நயந்துழைத்து யாத்தினாய்*
*நானிலம் போற்ற நல்லுணர்வூட்டி யழகுத் தெய்வதீபமே!*

19.05.2008 அன்று சிவபதமடைந்த எமது தெய்வத்திற்கு இன்று (18.06.2008) புதன் கிழமை மு.ப. 10 மணிக்கு வில்லூன்றி புனித ஸ்தலத்தில் நடைபெறும் சபிண்டீகரண அந்தியேட்டி ஆத்மசாந்திக் கிரியையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

[illegible]',
[illegible], பண்டத்தரிப்பு.

(75419)

**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அரசியல் சமாளிப்புகளுக்கும் கைகொடுத்து உதவும் யுத்தம்

அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் ஐயாயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும் என்பது உட்பட மூன்று கோரிக்கைகளை முன்வைத்து 366 தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து அடுத்த மாதம் 10 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் ஒரு நாள் பொது வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளன.

இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் - சமாதான முறையில் - பேச்சு மூலமாக - தீர்வு காண்பதில் உடன்பாடற்ற இலங்கை அரசுத் தலைமை, தமிழரை இராணுவ ரீதியில் அடக்கி, ஒடுக்கி, அவர்களின் பேரம் பேசும் வலுவைச் சிதறடித்த பின்னர், தான் விரும்பிய முடிவை அவர்கள் மீது தீர்வாகத் திணிக்கும் ஒரே இலக்கில் செயற்படுகின்றது.

அதனால் போர்த் தீவிர முனைப்பில் அது வெறி கொண்டு நிற்கிறது என்பது ஏலவே பல தடவைகள் இப்பத்தியில் சுட்டிக்காட்டியாகி விட்டது.

இத்தகைய போர்த் தீவிரப் போக்கினால் முழு நாடுமே யுத்தப் பேரழிவுக்குள் சிக்கிச் சின்னாபின்னமாகும் ஏதுநிலை ஏற்பட்டுள்ளது.

யுத்தத் தீவிரப் போக்கினாலும், தீர்க்க தரிசனமற்ற பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றுவதாலும், சீர்கெட்ட ஆட்சி முறையாலும், ஊழல், முறை கேடுகள், அதிகாரத் துஷ்பிரயோகங்கள், வீண், விரயம் போன்றவற்றாலும் நாட்டின் பொருளாதாரம் அதல பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. விலைவாசி எகிறுகிறது. பணவீக்கம் மோசமாகப் பெருகுகிறது.

அன்றாட வயிற்றுப்பாட்டுக்கு அல்லாடும் மக்கள் வீதிக்கு இறங்கிப் போராடும் நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றார்கள்.

அடுத்த மாதம் பத்தாம் திகதி நாடளாவிய ரீதியில் நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கும் பொது வேலை நிறுத்தம் பொதுமக்கள் மத்தியில் தீவிரமாக வளர்ந்து வரும் அதிருப்தி, கசப்புணர்வு, இயலாமை, எரிச்சல், சீற்றம் ஆகியவற்றுக்கானகட்டியமாகவேகொள்ளப்படவேண்டும்.

அதிகரித்து வரும் விலைவாசிக்கு ஈடுகொடுக்க முடியாமல் அல்லாடுகின்ற அப்பாவிப் பொதுமக்களுக்கு நிவாரணம் அளிக்கவும், மானியம் வழங்கவும் முடியாது எனக் கைவிரிக்கும் அரசு, மாகாண சபைகளைக் கலைத்து அநாவசியத் தேர்தல்களுக்குப் பல கோடி ரூபாவை வீண் விரயம் செய்கிறது; நூறுக்கும் அதிகமாக அமைச்சர்களைப் பட்டாளமாக நியமித்து, அரச கஜானாவைக் காலியாக்கி, கண்மூடித்தனமாகச் செலவிட்டுக் காசைக் கரியாக்குகின்றது.

அரச வருமானத்தை இப்படி அரசியல் குளறுபடிகளுக்காக வீணாக்குவதன் மூலம் ஏழை மக்களின் வயிற்றில் அடிக்கிறது அது.

இதுபற்றியெல்லாம் கேட்டால், 'செல்லும் செல்லாததற்கெல்லாம் செட்டியார் பொறுப்பு' என்பது போல, எல்லாப் பின்னடைவுகளுக்குமான பொறுப்புகளும் யுத்தம் மீதே போடப்படுகின்றன.

''நாட்டைப் பிரிக்க முயலும் புலிகளை இராணுவ ரீதியில் அழித்தொழிக்காவிட்டால் நாட்டைக் காப்பாற்ற முடியாது. புலிகளை அழிப்பதாயின் யுத்தம் புரியவேண்டும். யுத்தம் புரிவதற்கு நிதி செலவாகும். இப்போது மக்கள் எதிர்கொள்ளும் பொருளாதாரக் கஷ்டங்களுக்கு, யுத்தத்துக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்வதே முக்கிய காரணம். எனவே புலிகளை அழித்தொழிக்கும் அரசின் முயற்சிக்கு ஒத்துழைப்பதற்காக இந்தச் சுமைகளை எல்லாம் பொதுமக்கள் சுமந்துதானாக வேண்டும்.'' - என்று கொழும்பு அரசு விடும் கயிறைத் தென்னிலங்கை மக்கள் விழுங்கிக் களைத்துப்போய் விட்டார்கள்.

இப்போது இந்தத் தேவையற்ற மாகாணசபைக் கலைப்புக்கும், அதற்காக முற்கூட்டியே நடத்தப்படும் தேர்தலுக்கர்க விரயமாகப் போகும் நிதிக்கும் சமாளிப்புக் காரணம் கூறக்கூட இந்த யுத்தமும் இனப்பிரச்சினையும்தான் கையாலாகாத இந்த அரசுக்குக் கைகொடுக்கின்றன.

''இந்த யுத்தத்தில் புலிகளுடன் போராடி வெல்வதாயின் அரசுக்கு ஸ்திரமான அரசியல் பலம் இருக்க வேண்டும். அரசின் ஸ்திரத்தை அரசியல் ரீதியாக உறுதி செய்தால்தான் பிரிவினைவாதப் புலிகளுடன் திடமான - உறுதியான - போர் ஒன்றை நடத்த முடியும். அப்படி அரசின் ஸ்திரத்தை உறுதிப்படுத்துவதற்காகவே - அரசின் அரசியல் பலத்தை வலுப்படுத்துவதற்காகவே இப்படி முற்கூட்டித் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. இத்தகைய தேர்தல்கள் மூலம் மக்கள் பலத்தை வரித்துக்கொண்டு, அதன் வலிமையில் புலிகளுடன் தீவிர யுத்தத்தைத் தொடர அரசு எத்தனிக்கின்றது.'' - என இப்போது அரசுத் தரப்பில் புது விளக்கம் கூறப்படுகின்றது.

ஆக, எதற்கெடுத்தாலும் யுத்தத்தை ஒரு சாக்காகக் காட்டி, தென்னிலங்கை மக்களின் தலையில் மிளகாய் அரைக்க முடியும் என இந்த அரசுத் தலைமை நம்புகின்றது போலும்.

எத்தனை நாட்களுக்கு இத்தகைய அரசியல் உத்தி அரசுக்குப் பயன்தரும் என்பதற்கான பதிலை காலம் விரைவில் தந்துவிடும் என எதிர்பார்க்கலாம். எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே.

# இடம்பெயர்ந்தோர், சமுர்த்தி நிவாரண விநியோகம் வெள்ளியன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

இடம்பெயர்ந்த மற்றும் சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான மே, ஜூன் மாதங்களுக்கான விநியோகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை சகல ப.நோ.கூ. சங்கங்களிலும் ஆரம்பமாகும்.

இதற்கான பணிப்புரையை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ளார்.

நிவாரணப் பெருள்கள் வந்து சேராததால், யாழ்.குடாநாட்டில் இரண்டு மாத காலமாக வழங்கப்படாதிருந்த நிவாரணப் பொருள்களை விற்ப னைக்காகவுள்ள உணவுப் பொருள் களின் மூலம் உடன் வழங்குமாறும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ். அரச அதிபருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அமைச்சரை சந்தித்த இடம் பெயர்ந்து தற்காலிக இருப்பிடங் களில் வாழ்ந்து வருகின்ற மக்கள் தங்களுக்கான நிவாரணங்கள் சித்திரை மாதத் திற்குப் பின்னர் இது வரையில் கிடைக்கவில்லை என முறைப்பாடு செய்துள்ள நிலையிலே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.

இதன் பிரகாரம் மே, ஜூன் ஆகிய இருமாதங்களுக்கான இடம் பெயர்ந்தோர் நிவாரண விநியோகமும் மே, ஜூன் ஆகிய இரு மாதங்களுக்கான சமுர்த்தி நிவாரண விநியோகமும் வெள்ளிக்கிழமை முதல் யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் [illegible] மேற்படி நிவாரணப் பொருள்களுக்கான வழங்கல் கட்டளை கடந்த திங்கட்கிழமை முதல் யாழ். மாவட்ட புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புச் செயலகத்தில் வழங்கப் படுகின்றது.

அதே நேரம் நிவாரணகளுக்கான பொருள்கள் வருவதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளமையினால் மக்களின் நிலை உணர்ந்து விற்பனைக்காகவுள்ள உணவுப் பொருள்களையே நிவாரணமாக வழங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்திருப்பதால் அவசிய தேவை இருப்ப வர்கள் இந் நிவாரணங்களைப் பெற்றுக் கொள்ள இயலும் என்பதை யும் சிவப்பு நாடு, தீட்டல், உடையல் அரிசி, மா, சீனி, பருப்பு ஆகிய உண வுப் பொருள்களே தற்போதைக்கு வழங் கப்படுமென்பதையும் பொதுமக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப் படுகின்றன. (1)

# அரசின் ஸ்திரத்தை உறுதி செய்வதற்காக தேவையான தேர்தல்கள் நடத்தப்படும்

## ஊடகத்துறை அமைச்சர் இப்படிக் கூறுகின்றார்

கொழும்பு ஜூன் 18

அரசின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்காக எதிர்காலத்தில் இன்னும் பல தேர்தல்கள் நடத்தப்படலாம் என்று அரசின் பேச்சாளரான ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்தன நேற்று முன்தினம் கூறினார்.

பணம் செலவாகும் என்பதற்காக தேர்தல்களை நடத்தாமல் இருக்க முடியாது என்றும் அவர் கூறினார். தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம்இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் அரசின் பலத்தை உறுதி செய்வதற்காகவே அம்மாகாண சபைகள் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

அரசுக்குப் பெரும்பான்மை இல்லாத நிலையில் பெரும்பான்மையைப் பெறுவதற்காக சபைகளைக் கலைத்து தேர்தல்கள் நடத்துவதில் எந்தத் தப்பும் கிடையாது.

இதுபோல் எதிர்காலத்திலும் பல தேர்தல்கள் இடம்பெற வாய்ப்புகள் உள்ளன. அரசின் பெரும்பான்மையை உறுதிப்படுத்துவதன் மூலம்தான் தேசியப் பிரச்சினையை இலகுவாகத் தீர்க்க முடியும்.

இதேவேளை, தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுவது மிக முக்கியம். பரஸ்பரம் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டுவதை விடுத்து, இரு கட்சிகளும் இணைந்து செயற்பட முன்வர வேண்டும். - என்றார். (சி)

# பரீட்சைகள் செயலகத்தில்

யாழ்ப்பாணம், ஜூன் 18

இலங்கை மின்சார சபையால் நடத்தப்படவுள்ள லிகிதர், பற்றுச் சீட்டு உத்தியோகத்தர், தட்டெழுத்தாளர் ஆகியோருக்கான பரீட்சைகள் மற்றும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ள அபிவிருத்தி உதவியாளர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை ஆகியன எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை [illegible] செயலகத்தில் நடைபெறவுள்ள[illegible]

இது தொடர்பான மேலதிக விவரங்களை யாழ் செயலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என்று அரச அதிபர் தெரிவித்துள்ளார். (203)

# கைதடி நவீல்ட் பாடசாலை அனுமதிக்கு பதிவு இன்று!

மந்திகை, ஜூன் 18

கைதடி நவீல்ட் பாடசாலைக்குச் செல்லாத 18 வயதிற்குட்பட்ட வாய் பேசமுடியாத, வடமராட்சியிப் பிரதேசத்தில் உள்ள பிள்ளைகள் இருப்பின் பெற்றோர்கள் அவர்கள் பற்றிய விவரங்களை இன்று காலை 9 மணிக்கு வடமராட்சி செவிப்புலனற்றோர் நிறுவனத்தில் (நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதியில்) பிள்ளைகளுடன் சமுகமளித்து பதிவு செய்துகொள்ளுமாறு வடமராட்சி செவிப்புலனற்றோர் நிறுவனத் தலைவர் ரீ. செந்தில்குமார் அறிவித்துள்ளார்.

வரமுடியாதவர்கள் தகவல்களை அனுப்பிப் பதிவு செய்து கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (1-128)

# கலாசாரப் போட்டிகள்

வலிகாமம் மேற்கு கலாசார பேரவை நடத்தும் பிரதேசமட்ட இசை (கர்நாடக சங்கீதம்), சமூக நாடகம், நாட்டுக் கூத்து போட்டிகள் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு வட்டு. இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களை குறிப்பிட்ட நேரத்தில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (1-29)

# இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 18

சாந்திகம் உளவளத்துணை நிலையத்தில் பயிற்சி பெற்று வெளியேறும் உளசமூக பணியாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று காலை 8.00 மணிக்கு தலைவர் திருமதி ஷிரோமி லெனால்ட் தலைமையில் சாந்திகம் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தி னராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கி கௌரவிக்கவுள்ளார். (1-68)

* * *

வலி.வ்டக்கு, ஜூன் 18

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையேயான தமிழ் தினப் போட்டியின் குழு நிகழ்வுகள் இன்று காலை 8.00 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளன.

குழு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளை உரிய நேரத்திற்கு சமூகம் தரும்படி உதவிக் கல்விப் பணிப்பாளர் வேண்டியுள்ளார். (1-86)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 18

விஷேட தேவையுடைய சிறுவர்களுக்கான செயற்பாட்டு முகாம் யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்

சி.எச்.ஏ.மனிதநேய நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இந்த சிறுவர் முகாமில் மாணவர்களின் பெற்றோருக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் இடம்பெறும்.

சம்பந்தப்பட்டவர்கள் தவறாது சமூகமளிக்க வேண்டுமென கேட்கப் பட்டுள்ளனர்.

இந்த கருத்தரங்கும் செயல்பாட்டு முகாமும் தவிர்க்க முடியாத காரணத்தால் பின்போடப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (1-302)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 18

லயன்ஸ் கழகத்தின் பிராந்தியம் 9 இன் பிராந்திய மாநாடு இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற வுள்ளது.

பிராந்தியத் தலைவர் க.மு. பத்மநாதன் தலைமையில் நடை பெறும் இந் நிகழ்வில் லயன் வைத்திய கலாநிதி வி. தியாகராசா பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (1)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 05 | 19.06.2008 |
| | வியாழக்கிழமை |
| திதி: | பிரதமை |
| | பி.இ 01.19 வரை |
| நட்சத்திரம் : | மூலம் |
| | மு.இ 06.31 வரை |
| சுபநேரம் : | 07.24 - 08.54 |
| ராகுகாலம் : | 01.24 - 02.54 |

# கரவெட்டிப் பிரதேச எல்லைக்குட்பட்ட கலைஞர்களை கௌரவித்தலும் சாதனையாளருக்குச் சான்றிதழ் வழங்கலும்

கரவெட்டி, ஜூன் 18

• கரவெட்டிப் பிரதேச எல்லைக் குட்பட்ட கலைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் கலை, இலக்கியப் போட்டிகளில் பங்குபற்றிச் சாதனை படைத்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கலும் எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய கல்யாண மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

கரவெட்டி பிரதேச செயலர் சி. சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் கலைஞர்கள் பாரம்பரிய மங்கள இசை வாத்தியங்கள் சகிதம் முருக மூர்த்தி ஆலயத்தில் இருந்து கலை, இலக்கிய ஆர்வலர்கள், பிரமுகர்கள் சகிதம் விழா மண்டபத்திற்கு அழைத்து வரப் படுவர்.

28 ஆம் திகதி சனிக்கிழமை பண்டிதர் சச்சிதானந்தன் நினைவரங்கில் பிரதேச செயலர் சி. சத்தியசீலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட முன்னாள் அரச அதிபரும் யாழ். மாவட்ட மீள் எழுச்சித்திட்ட பிரதிப் பணிப்பாளருமான வி. விசுவலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் செ. சேதுராஜா, கரவெட்டி விக்கேஸ்வராக் கல்லூரி அதிபர் எஸ். சிவசிதபரம் ஆகியோரும் கலந்துகொள்வர்.

29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உடுப்பிட்டி சிவசம்புப்புலவர் நினைவரங்கில் பிரதேச செயலர் சி. சத்திய சீலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் க. கணேஷும், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறை விரிவுரையாளர் எஸ்.சிவலிங்கராசாவும் கலந்து கொள்வர். (203-70)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
ௐ

## சிவாசார்ய அபிஷேக அழைப்பு

அன்புடையீர்!
ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான சர்வதாரி வருஷம் ஆனி மாதம் 05ஆம் நாள் (19.06.2008) வியாழக்கிழமை பிரதமை திதியும் மூல நக்ஷத்திரமும் சித்தயோகமும் கூடிய முற்பகல் 10மணி 30 நிமிஷம் முதல் 11 மணிவரையுள்ள சிம்மலக்ன சுபமுகூர்த்தத்தில்
ஊரெழு, சிவஸ்ரீ சதா. பாலசுந்தரக்குருக்களின் பேரர்களும்
எமது குமாரர்களுமாகிய
பிரம்மஸ்ரீ சபேஸ்வர சர்மா
பிரம்மஸ்ரீ சோமசுந்தர் சர்மா
ஆகிய இருவருக்கும் விஷேஷ தீட்சை, நிர்வாண தீட்சை, ஆசார்யாபிஷேகஞ் செய்ய ஸ்ரீ செண்பக விநாயகர், ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருவருள் துணையுடனும் பெரியோர்களின் ஆசியுடனும் நடைபெற திருவருள் கைகூடியிருப்பதால் ஷெ முகூர்த்த வேளையில் குடும்ப சமேதராய் வருகை தந்து ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்பாக அழைக்கின்றோம்.

ஷெ முகூர்த்தம்: ஊரெழு, ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மண்டபத்தில்
தீட்சாகுரு: சிவஸ்ரீ ஆ.சந்திரசேகரக் குருக்கள், நீர்வேலி.
வித்யாகுரு: சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்
தர்மசாஸ்தா குருகுலம், இணுவில்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:
ஸ்ரீமதி வைத்தியநாதக் குருக்கள் குடும்பத்தினர்,
ஸ்ரீமான். ஸ்ரீமதி பஞ்சாட்சரக்குருக்கள் குடும்பத்தினர்.
சிவாச்சாரியபீடம், ஊரெழு மேற்கு, சுன்னாகம்.
(75344)



ஓம்
நயினை ஸ்ரீ நாகபூஷணியம்பாளின்
தீர்த்தோற்சவ நன்நாளில்
சித்தன்கேணி அருள்மிகு
ஸ்ரீ நாக கன்னியம்பாள் ஆலயத்தில்

## வருடாந்த தீ மிதிப்பு வைபவம்

இன்று (18.06.2008) புதன்கிழமை பிற்பகல்
ஒரு மணிக்கு இடம்பெறும்
காலை 8 மணியளவில் ஞானகுரு
க.இந்திரன் ஐயா அவர்களால் கிரியைகள் ஆரம்பித்து அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று நாககன்னியம்பாள் திருவூஞ்சல் ஆடி, நாகத்தில் திருவீதி வலம் வரும்போது, தீ மிதிப்பு வைபவ நிகழ்வில் மெய்யடியார்கள் அனைவரும் கலந்து அம்பாளின் இஷ்ட சித்திகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

சிறப்பு நிகழ்ச்சிகளாக
சைவப்புலவர்களின் சொற்பொழிவுகள் இடம்பெறும்.
★ க.நித்தியதசிதரன் (ஆசிரியர்)
★ செ.கந்த சத்தியதாசன் (வலிகாமம் ஆசிரிய ஆலோசகர்)
மங்கள வாத்தியம்: K.N.ராமநாதன் குழுவினர் (வட்டு.வடக்கு, சித்தன்கேணி)
(75450)

தீமிதிப்பு வைபவம் சிறப்புற வாழ்த்துபவர்கள்:
க.சந்திரசேகரம் (கடை),
பூநாறி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

## கேள்வி அறிவித்தல்
### அநாதரவான சடலங்களைப் புதைத்தல்

யாழ்.போதனா வைத்தியசாலையிலுள்ள அநாதரவான சடலங்களை யாழ்.பண்ணை மயானத்தில் புதைப்பதற்குத் தகுதியுடையோருடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகள் 30.06.2008இற்கு முன்பு கிடைக்கக்கூடியவாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கவும்.

கேள்விப்பத்திரங்களை ரூபா 500 செலுத்தி வைத்தியசாலையில் பெற்றுக்கொள்ளவும்.

(சி/553374)
அ.எ.ஞானஜோதி,
பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

## உடுப்பிட்டி
## மகளிர் கல்லூரி
### பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

மேற்படி சங்கப் பொதுக்கூட்டம்
22.06.2008 ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 10 மணிக்குப் பாடசாலையின்
திருமதி பா.இராசேந்திரசிங்கம்
ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும்.
பழைய மாணவர்கள் அனைவரும்
தவறாது சமுகம் தரவும்.

திருமதி L.N.ஜோசேப், தலைவர். (75433) திருமதி க.தேவராசா, செயலாளர்.

## வீதி சேதம்

நவாலி,ஜூன்18
ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலய வீதியிலிருந்து சங்கரப்பிள்ளைவீதியுடன் இணையும் புளியங்கண்டுப் பிள்ளையார் வீதி நீண்டகாலமாக திருத்தப்படாமையினால் போக்குவரத்து செய்வதில் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தவிடயம்தொடர்பாக உரியவர்களுக்குப் பல தடவைகள் தெரியப்படுத்திய போதிலும் பயன் எதுவும்கிடைக்கவில்லை என்று கூறப்படுகின்றது. விரைவில் உரியவர்களை நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கேட்டுள்ளனர்.
(203-100)

## பூரணை விழா

யாழ்ப்பாணம், ஜூன்18
தாவடி, கொக்குவில் இராமகிருஷ்ண சமிதியினர் இன்று புதன் கிழமை மாலை 5.30 மணிக்கு சமிதி மண்டபத்தில் பூரணை நிகழ்வை நடத்தவுள்ளனர். (203)

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம்செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்.
(75296)

## கண்ணீர் அஞ்சலி



துர்க்கா துரந்தரி
சிவத்தமிழ்ச்
செல்வி அன்னை
தங்கம்மா
அப்பாக்குட்டி
சைவத்தையும்
தமிழையும்
வளர்த்தெடுக்க
அரும்பணியாற்றிய
அன்னை இறைவனடி எய்திய செய்தி அறிந்து மிகவும் கவலையடைவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
சோ.புவனேந்திரன் (மாவை) குடும்பம்,
அத்தியடி, யாழ்ப்பாணம்.
(75451)

## கண்ணீர் அஞ்சலி



சைவமும்
தமிழும்
மலர்ச்சி பெற
தன்னை
அர்ப்பணித்த
அன்னை
செல்வி
தங்கம்மா
அப்பாக்குட்டி
அவர்களின் ஆத்மா சாந்தி பெற
இறைவனை
வேண்டுகின்றோம்.
பரிபாலன சபை,
நீர்வேலி கந்தசுவாமி கோயில்.
(சி/553378)

## கண்ணீர் அஞ்சலி



சிவத்தமிழ்ச்
செல்வி
கலாநிதி
தங்கம்மா
அப்பாக்குட்டி

தாயே சைவமொடு தமிழ் வளர்த்தாய்
துர்க்கையவள் துணை கொண்டு
துணையற்றோர்க்கு
வாழ்வளித்தாய் அன்னையே!
துர்க்காபுரம் உள்ளவரை உன் நாமம் வாழும்
உம் பதமலர்க்கு எம் கண்ணீர் அஞ்சலிகள்.
ஸ்ரீஞான செல்வ விநாயகர்,
[illegible]
(சி/553381)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கொக்குவில் இந்துவின் புகழபூத்த கணித ஆசானும்
பிரதியதிபருமாகிய



திரு.சு.வே.மகேந்திரன்
(சிவபாதம்)
அவர்கள் யாழ்ப்பாணக்
கல்வி வலயத்தின்
கணித பாட
உதவிக்கல்விப்பணிப்பாளராக
பதவி உயர்வு
பெற்றமையையிட்டு
அவரைப் பாராட்டி
வாழ்த்துவதுடன் அவர் மேலும்
பல உயர் பதவிகளைப்
பெற்று அவரது பணி சிறக்க அகமகிழ்ந்து வாழ்த்தும்
பெரியத்தான்,
பெரியக்கா, மருமக்கள்.
கனடா. (75443)

உ
முருகன் துணை

## இணுவில் கந்தசுவாமி கோயில்
### மகோற்சவம் 12ஆம் நாள் மஞ்சத் திருவிழா

காலம்: நாளை (19.06.2008) வியாழக்கிழமை.
காலை 6 மணிக்கு சண்முகப்பெருமானுக்கு 1008 கலச சங்காபிசேஷகம் நடைபெற்று, பகல் திருவிழா நடைபெறும்.
பிற்பகல் 1.30 மணிக்கு மஞ்சத்திருவிழா ஆரம்பமாகும்.
பிற்பகல் 4 மணிக்கு புகழ்பெற்ற திருமஞ்சத்தில் சண்முகப்பெருமான் வள்ளி, தெய்வானை சமேதராக திருவீதி உலாவில் காட்சி தருவார்.
அடியார்கள் அனைவரும் எம்பெருமானை தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகிறோம்.
இணுவில். 12ஆம் திருவிழா உபயகாரர்கள்.
(75350)

## இருவிழி சொரிய ஈராண்டு இதய அஞ்சலி



இமையாணனைச் சேர்ந்த
செல்வன்
தர்மலிங்கம்
ரதீஸ்குமார்
அன்னை மடியில் [இமையாணன்]:
11✱10✱1977
காலனின் பிடியில் [சவுதி அரேபியா]:
11✱07✱2006

சிறுவயதில் செல்வம் தேடிச் சென்ற செல்வனே
குறுங்காலமதில் காலன் உனைத்தேடி வந்தனனோ!
வெறுங்கூடாய் எம் உடல்நிலை தளர்வதைப் பாராயோ!
ஆறவும் வழியின்றி தேறவும் முடியாமல் மாய்கிறோமய்யா!
மீளவும் எமைவந்து பாராயோ செல்வனே
மீளாத் துயில் கொள்ள முடிகிறதோ குமாரனே
உனதன்பு உறவுகள் தவிப்பதை அறியாயோ!

"சிவஸ்தான்", பிறவளவு,
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.
உனைப் பிரிந்து தவிக்கும்:
அப்பா, அம்மா, அண்ணா,
அண்ணி, தங்கை, தம்பிமார்கள்.
(75411)

## மரண அறிவித்தல்
### தாமோதரம்பிள்ளை குமார்



குமார் மாஸ்டர் என்று அழைக்கப்படும் தாமோதரம்பிள்ளை குமார் 12.06.2008 வியாழக்கிழமை ஒஸ்லோ, நோர்வேயில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி தாமோதரம்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் நீற்றாவின் (பபா) அன்புக் கணவரும் றொக்சன், மோகன், ரீனா (பாமா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரகுபரன், நிர்மலா ஆகியோரின் பாசமிகு மாமனும் அர்ஜுன், ரம்மியா, ஆர்திகா ஆகியோரின் பாசமிகு பேரனும் முத்துக்குமார் (உடுப்பிட்டி), காலஞ்சென்ற மயில்வாகனம் (சிறுப்பிட்டி), வள்ளியம்மை - கனகசுந்தரம் (U.K.), அம்பிகை - ஆறுமுகம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (19.06.2008) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு St.Olay's ஆலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு திருப்பலி ஆராதனையின் பின் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
றொக்சன் மோகன் (மகன்)
+472139884/+4797557004
e-mail:rokum@nsa.no
நோர்வே.
(சி/553368)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வடிவேலு கதிர்காமு



அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட வடிவேலு கதிர்காமு 15.06.2008 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வடிவேலு - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், சிவபாக்கியத்தின் அன்பு கணவரும், காலஞ்சென்ற தெய்வானை மற்றும் கனகசபை, ஆறுமுகம் (தம்பாலை), பொன்னம்மா (மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சற்குணதேவி, கணேசராசா (ஜேர்மன்), பேரின்பராசா (கனடா), வரதராசா (கொழும்பு), காலஞ்சென்ற ஜெயராஜ் மற்றும் சறோஜாதேவி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவலிங்கம், மனோரஞ்சிதமலர் (ஜேர்மன்), சாந்தினி (கனடா), மனோன்மணி (கொழும்பு), புஸ்பரஜனா (இந்தியா), மனோரஞ்சன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பகீரதன், கௌசி, இராகுலன், தர்சினி, பத்மயா, மிதுலா, சுஜா, சுஜிக்கா, புருசோத், தர்ஞா, தர்மினி, பிரசா, சர்மினி, உபாசகி, ஜெசிக்கா, ஜெயசூரன், ஜெயசீலன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (18.06.2008) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக அராலி வடக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சிவலிங்கம் குடும்பம்.

மடத்தடி, மாவிட்டபுரம்,
தெல்லிப்பளை.
(75469)

## குணசிங்கம் ஜனார்தன்



கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் இல.20, பிரம்படியைவசிப்பிடமாகவும் கொண்ட குணசிங்கம் ஜனார்தன் நேற்று (17.06.2008) செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் குணசிங்கம் - மயூரவதனி தம்பதியரின் அன்பு மகனும், தர்மேந்திரா, எஜிதரன் ஆகியோரின் அன்புச் ச்கோதரரும், குகதாசன், கருணாநிதி, அச்சுதன், அமரர் காண்டீபன், விசாகன், குணாளன், மல்லிகா, சௌதாம்பிகை ஆகியோரின் அன்புப் பெறாமகனும், கமலநாதன், ஸ்ரீகாந்தன் ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (19.06.2008) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ.குணசிங்கம் (தகப்பன்).

20, பிரம்படி லேன்,
கொக்குவில்.
(75489)

# 31ஆம் நாள் (அந்தியேட்டி) நினைவஞ்சலி



தோற்றம்: 13.08.1950

மறைவு: 19.05.2008

## அமரர் நல்லையா புலேந்திரன்

(முன்னாள் மாநகரசபை ஊழியர்)

வையகத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

எமது தந்தையார் நோயுற்றசமயத்தில் வைத்தியசேவை புரிந்த யாழ்.போதனா வைத்தியசாலை (விடுதி, இல.28, 26) வைத்தியர்கள், தாதிமார் மற்றும் ஊழியர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றி கூறிக்கொள்கின்றோம். அத்துடன் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன விருந்திலும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*91, மூர்த்தவிநாயகர் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
(75483)

- குடும்பத்தினர்.

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



19.05.2008 அன்று ஜேர்மனியில் சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு

அமரர்

## கந்தசாமி செல்வம்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியை இன்று (18.06.2008) புதன் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது தாயார் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும், குடும்பத்தினரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

*கலையரசு வீதி,*
*நவாலி தெற்கு,*
*மானிப்பாய்.*
(75471)

தாய் கணேசம்மா.

# சிவத்தமிழ்ச்செல்வியின் அஸ்தி கீரிமலையில் கரைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன்18

சிவத்தமிழ்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் அஸ்தி புனித தீர்த்தமான கீரிமலையில் நேற்றுக் கரைக்கப்பட்டது.

படையினரின் அனுமதிபெற்று 14பேர் நேற்று கீரிமலைக்குச் சென்று கீரிமலை புனித தீர்த்தத்தில் அஸ்தியைக் கரைத்தனர்.

இதேவேளை அன்னையின் அஸ்தியை வைத்து நினைவாலயம் ஒன்றை துர்க்கையம்மன் யாத்திரிகர் விடுதிக்கு அருகில் அமைப்பதென ஆலய திருப்பணிச்சபை முடிவு செய்துள்ளது. (அ-1)

# நாகபூசணி ஆலயத்திற்கு புதிய இராஜகோபுரம்

நல்லூர், ஜூன்18

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்திற்கென புதிய ராஜகோபுரம் அமைக்கப் படவுள்ளது.

108 அடி உயரமான 7 தளங்களைக் கொண்ட இந்த ராஜகோபுரத்திற்கான அடிக்கல் நாட்டு வைபவம் தீர்த்த உற்சவமான இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு அறங்காவல் சபையின்தலைவர் ஆ.தியாகராசா தலைமையில் நடைபெறும் கிழக்கு நுழைவாயிலில் இந்த ராஜகோபுரம் அமையும். (202-11)

# 'நம்பிக்கை வரிகள்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன்18

வி.பி.தனேந்திராவின் 'நம்பிக்கை வரிகள்' நூல் வெளியீட்டு விழா இன்று முற்பகல் 9 மணிக்கு அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அரியாலை காந்தி சனசமூக நிலைய தலைவர் ம.வித்தியானந்தநேசன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் துறைத் தலைவர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரனும் சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலக திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் சி.இரவிந்திரசர்மா, யாழ். மாவட்ட சிரேஷ்ட நன்நடத்தை அதிகாரி திருமதி கனகாம்பிகை சிவராஜா ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

நூலின் ஆய்வுரையை எழுத்தாளர் செ.யோசப் பாலா நிகழ்த்துவார்.

# அநாதரவான சைக்கிள் நீதிமன்றத்திடம்

யாழ்ப்பாணம், ஜூன்18

அநாதரவான நிலையில் சாவகச்சேரி பொலிஸாரால் மீட்கப்பட்ட மிதிவண்டி நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டது.

மிதிவண்டியின் உரிமையாளர் ஆதாரங்காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (1-207)


திறப்புவிழா அழைப்பிதழ்

SCOT Computer Sales & Repair Centre

தென்மராட்சி நகரில் தகவல் தொழிநுட்பத்துறையில்
புத்தொளி பரப்ப கண்டி வீதியில் கணினி விற்பனை நிலையம்

நிகழும் வைகாசி வியாழன் 19.06.2008 நாளை
காலை 6.00 மணி தொடக்கம் 7.30 மணிவரையுள்ள சுபநேரத்தில்

திரு. V.M.K. புலேந்திரன்
(V.M.K நகை விற்பனை நிறுவன உரிமையாளர்)
அவர்களால் நாளை திறந்து வைக்கப்படவுள்ளது.

அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(மேற்படி அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுங்கள்)

- இயக்குனர் -
திரு. ம. நடனதேவன்

SCOT UPGRADE YOUR LIFE
Computer Sales & Repair Centre
Kandy Road, Chavakachcheri.
T.P:- 0776701394








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரும்பிராய் ஆசிரியை விஜயானந்தியின் மரணத்தில் மர்மம்; சடலத்தை தோண்டி எடுத்து மீள் பிரேத பரிசோதனை செய்ய உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூன் 18

நல்லூர், வைமன் வீதியில் வசித்த உரும்பிராய் இந்துக் கல்லூரியில் பணி புரிந்த ஆசிரியை ஒருவரின் மரணத்தில் மர்மம் நீடிப்பதை அடுத்து அவரது சடலத்தை மீள் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு யாழ். மாவட்ட நீதிபதி இ.வசந்தசேனன் நேற்றுப் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

வைமன் வீதியில் கடந்த மாதம் 23 ஆம் திகதி ஆசிரியையான விஜயானந்தி ஜெகதீஸ்வரன் என்ற குடும்பப் பெண் எரிகாயமுற்று மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டு யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

அவரது மரணம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட நீதிபதி இ.வசந்தசேனன் சாட்சியங்களில் காணப்பட்ட முரண்பாடுகளையடுத்து பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை புதைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

விஜயானந்தியின் மரணம் குறித்து மரணமானவரின் பெற்றோர் செய்த முறைப்பாட்டையடுத்து விரிவான விசாரணை நடத்தப்பட்டது.

மணநிலை பாதிக்கப்பட்டிருந்த நிலையில் ஆசிரியை தமக்கு தாமே தீமூட்டி மரணமானார் என்று அவரது கணவரின் தரத்திப்பினர் நீதிமன்றத்திடம் தெரிவித்திருந்தனர். ஆனால், தமது மகள் நல்ல சுக தேகியாக இருந்தார் என்றும் அவரை வேறு யாரோ எரியூட்டி கொலை செய்திருக்க வேண்டும் என்றும் ஆசிரியையின் பெற்றோர் நீதிமன்றத்துக்கு தெரிவித்தனர். அதற்கு ஆதாரமாக ஆசிரியைக்கு நூல் கட்டியதாகக் கூறப்படும் இரு ஆலய குருக்கள்மாரை சாட்சிகளாக நீதிமன்றத்துக்குத் தெரிவித்தனர்.

ஆசிரியை விஜயானந்தி ஆரோக்கியமாக இருந்தார், திருஷ்டி கழிப்பதற்காகவே நூல் கட்ட வந்தார் என குருக்கள்மார் இருவரும் நீதிபதியிடம் சாட்சியம் அளித்திருந்தனர். அதனையடுத்து ஆசிரியை கொலை செய்யப்பட்டாரா? அல்லது தற்கொலை செய்தாரா? என்பதைக் கண்டறிவதற்காக மீள் பிரேத பரிசோதனைக்கு நீதிபதி வசந்தசேனன் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

நாளை வியாழக்கிழமை சடலத்தை தோண்டி எடுத்து பிரதம சட்ட வைத்திய அதிகாரி மூலம் பிரேத பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிபதி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (அ-1)

## சாட்சிகளை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகள் இச்சட்டமூலத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவிடாமல் எதிர்ப்புத் தெரிவித்தன.

இருப்பினும், இச்சட்டமூலத்தை விவாதிப்பதற்கு மாத்திரம் வழி விடுமாறு அரசு எதிர்க்கட்சிகளைக் கேட்டுக்கொண்டது. இதைச் சட்டமாக்குவதற்கு முன் எதிர்க்கட்சிகளுடனும் சட்ட வல்லுனர்களுடனும் கலந்தாலோசிக்கப்படும் என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டதால் கடும் இழுபறிக்குப்பின் இச்சட்டமூலம் நேற்று விவாதத்திற்கு எடுக்கப்பட மாத்திரம் இடமளிக்கப்பட்டது.

இச்சட்டமூலத்தை நேற்று செவ்வாயன்று 2.30 மணிவரை விவாதித்தது அதன்பின் இது தொடர்பாக கட்சித் தலைவர்கள், சட்ட வல்லுனர்கள் அனைவரும் ஒன்றுகூடி திருத்தங்களை மேற்கொண்ட பின் தொடர்ந்து வியாழக்கிழமையும் இந்த விவாதத்தை நடத்தி அன்றையதினம் சட்டமூலத்தை நிறைவேற்றலாம் என்பதே அத் தீர்மானம்.

அதன்படி சபை நேற்று நண்பகல் 12 மணிக்கு கூடி பிற்பகல் 2.30 மணிவரை இச்சட்ட மூலத்தின் மீது விவாதம் நடத்தியது. விவாதம் முடிந்து கட்சித் தலைவர்களும் சட்ட வல்லுனர்களும் கூடிக் கலந்தாலோசிப்பர் என்றும் சபை முதல்வர் தெரிவித்தார்.

அதன்படி நாளை வியாழக்கிழமையும் இந்த விவாதம் இடம்பெற்று சட்டமூலத்தை அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சபை முதல்வர் நிமால் சிறி பாலடி சில்வா நேற்று சபையில் தெரிவித்தார். (சி)

## ஊடக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகவியலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐந்து ஊடக அமைப்புகள் நேற்று மாலை நடத்திய கூட்டத்தில் எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளோடு அரசுத் தரப்பின் சில பிரதிநிதிகளும் தாமே வலிந்து ஏற்பாட்டாளர்களுடன் தொடர்பு கொண்டு அழைப்புகளைப் பெற்றுக் கலந்து கெண்டனர் எனத் தெரியவருகின்றது.

ஊடக சுதந்திரத்தையும், ஆபத்துக்குள்ளாகியுள்ள ஊடகவியலாளர்களையும் பாதுகாக்கும் நோக்கோடு விசாலமான அரசியல் கட்டமைப்பு அணி ஒன்றை உருவாக்குவதற்காகவே நேற்றைய கூட்டம் மாலை 4 மணிக்கு இலங்கைப் பத்திரிகை நிறுவகத்தில் கூட்டப்பட்டதாக அறிய வந்தது.

பிரதானமான எதிர்க்கட்சிகள் எல்லாவற்றுக்கும் அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் அரசுத் தரப்புப் பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஊடக சுதந்திரத்துக்கான தமது ஆதரவை வெளிப்படுத்தி யிருக்கின்றார்கள்.

அரசுத் தரப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் டலஸ் அழகப்பெருமவும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனநாயகப் பிரிவைச் சேர்ந்த அமைச்சர் ராஜித சேனாரத்னவும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

தவிரவும் ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி., தேசிய சுதந்திர முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - மக்கள் அணி, இடதுசாரி முன்னணி உட்படப் பல கட்சிகளின் மூத்த தலைவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இதேவேளை-

ஊடக சுதந்திரத்திற்கான போராட்டம் என்ற பெயரில் பரந்த ஓர் அரசியல் கட்டமைப்பு உருவானால், அதில் பிரதான எதிர்க்கட்சிகளான ஐ.தே.கவும், ஜே.வி.பியும் ஒன்றிணைந்து அரசுக்கு எதிராகச் செயற்படும் ஆபத்து இருப்பதை அரசுத் தரப்பு உணர்ந்துள்ளதாகவும் -

அத்தகைய கூட்டுக்கு இடமளிக்கும் விசாலமான அரசியல் கட்டமைப்பு ஒன்று உருவாவதற்கு வாய்ப்பளிக்காமல் தடுப்பதற்காகவே அரசுத் தரப்பு இதற்குள் தானாக வலிந்து மூக்கை நுழைத்துக் கொண்டு உட்புகுந்திருக்கின்றது எனவும் - சில வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன. (அ-உ)

IDM
புதிய பிரிவுகள் ஆரம்பம்:
(வார, வார இறுதி நாள் வகுப்புக்கள்)
BTEC.Dip.ICT, BTEC.Dip.In.Hardware, DIBM, Ms Office, Vb.Net, JAVA, HND
IDM, 216, Navalar Road, Jaffna.
IDM, Moonamalai Lane, Manipay.
IDM, Kodikamam Road, Nelliady.

# மாகாணமட்ட விளையாட்டுப்போட்டி வவுனியாவில் 28இல் ஆரம்பமாகும்

## 24, 26ஆம் திகதிகளில் பயணமாக ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 18

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 28ஆம் திகதி வவுனியாவில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டிகளை இம்மாதம் 14ஆம் திகதி முதல் நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் யாழ்.மாவட்ட பாடசாலை மாணவ, மாணவிகள் இதில் கலந்துகொள்வதற்கு இயலாதநிலை ஏற்பட்டதன் காரணமாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நடவடிக்கைகள் காரணமாக இப்போட்டிகள் பிற்போடப்பட்டன.இந்நிலையில் நேற்றுமுன்தினம் யாழ்.அரச அதிபர், யாழ்.மாவட்ட கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள் மற்றும் வடமாகாணசபையின் உயரதிகாரிகள் ஆகியோருடன் கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்.மாவட்ட பாடசாலை மாணவ, மாணவிகளும் கலந்துகொள்ளும் வகையில் எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் வட மாகாணத்திற்கான பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்த ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதன் பிரகாரம் 359 பேரினைக் கொண்ட முதலாவது குழுஎதிர்வரும் 24 ஆம் திகதியும் 292 பேரினைக்கொண்ட இரண்டாவது குழு 26 ஆம் திகதியும் 275 பேரினைக் கொண்ட மூன்றாவது குழு 28 ஆம் திகதியும், 14 பேரைக் கொண்ட நான்காவது முழு 30 ஆம் தகதியும் கப்பல் மூலம் பயணம் செய்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

கப்பல் மூலம் திருலைக்கும் அங்கிருந்து பேரூந்துகள் மூலம் வவுனியாவுக்கும் சென்று வருவதற்கான போக்குவரத்து வசதிகளை வடமாகாண சபை ஏற்பாடுசெய்கின்ற அதே நேரம் இம் மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்களுக்கான உணவு,தேநீர், வலுவூட்டும் பானங்களுக்கான ஏற்பாடுகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்றுக்கொண்டுள்ளார். (1)

## நீண்டகால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டத்தின் வெற்றி தவிர்க்க முடியாதது என்று நோர்வேயில் உள்ள எரித்திரிய அமைப்பின் பிரதிநிதியான சாம் யாறட் தெரிவித்துள்ளார்.

நோர்வேயில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற 'பொங்கு தமிழ்' நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு பேசுகையில் மேலும் கூறியதாவது:-

தமிழ் மக்களின் கோரிக்கைகள், தமிழ் மக்களின் தன்னாட்சியுரிமை, நீதியான சமாதானத்தின் மீதான அவர்களின் நாளாந்த தேடல் ஆகியவற்றுக்கு எரித்திரிய மக்களின் ஆதரவு என்றும் உண்டு என்பதை, நோர்வேயில் உள்ள எரித்திரிய சமூகத்தின் சார்பில் நான் இங்கு வலியுறுத்திக் கூறுகிறேன்.

உங்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவளிப்பது என்பது அடிப்படையில் நியாயமானது. ஏனெனில் உங்களை ஒத்த சூழ்நிலையில் நாமும் இருந்தோம். அந்நிலை மாறி நீண்டகாலங்கள் கழிந்துவிடவில்லை. எரித்திரிய மக்கள் மீதான எதியோப்பியாவின் நீதியற்ற நடவடிக்கைகளுக்காக நாம் போராட வேண்டியிருந்தது.

எமது விடுதலைப் போராட்டம் 30 ஆண்டுகள் நீடித்தது. ஆனபோதும் எமது வெற்றி தவிர்க்கப்பட முடியாத ஒன்று என்பதை எப்போதும் நாம் அறிந்திருந்தோம்.

1977 ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியம் எதியோப்பியாவுடன் கூட்டுச் சேர்ந்ததன் விளைவாக விடுவிக்கப்பட்ட எமது பிரதேசங்களை பறிகொடுக்க நேர்ந்தது. ஆனபோதும் எமது நம்பிக்கையை நாம் இழக்கவில்லை.

இப்புறநிலையில் எரித்திரிய மக்களாகிய நாம் ''எமது விடுதலைக்கான போராட்டம் காலநீட்சியுடையது. ஆனால் எமது வெற்றி தவிர்க்கப்பட முடியாதது'' என்ற வாதத்தை எமது விடுதலைக்கான தாரக மந்திரமாக வரித்துக்கொண்டோம். ஆகையினால் எரித்திரிய மக்களாகிய நாம், உங்களின் சுதந்திரத்துக்கான போராட்டத்தில் நம்பிக்கை கொண்டுள்ளோம். ஏனெனில் உங்களின் போராட்டம் தன்னாட்சியுரிமையையும், சமூக நீதியையும் அடிப்படை இலட்சியமாகக் கொண்டுள்ளது- என்றார்.

## காங்கேசன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையா அல்லது மோதல் சம்பவமா என்பது குறித்து உறுதியான தகவல்கள் எதுவும் இச்செயதி எழுதப்படும் வரை கிடைக்கப் பெறவில்லை. (அ-1-70)

## மூதூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் இலங்கைக்கு உதவி வழங்கும் முக்கிய நாடுகளைத் தமது இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறும் அந்த அமைப்புக் கோரவுள்ளது.

மூதூரில் மேற்படி மனித நேயப் பணியாளர்களின் படுகொலைகள் இடம்பெற்று இரண்டுவருடங்கள் பூர்த்தியடையப் போகின்றன. ஆனால் இவ்விடயம் குறித்து இதுவரை எதுவும் உருப்படியாக இடம்பெறவில்லையென ரோய்ட்டரிற்குத் தெரிவித்துள்ள பட்டினிக்கு எதிரான அமைப்பின் நிறைவேற்று இயக்குநர் பிரன்கொய் டகெல், 'ரெய்ட்ட'ருக்குத் தெரிவித்துள்ளார். இலங்கை அரசு மேற்கொள்ளும் விசாரணைகளில் தங்களுக்கு நம்பிக்கையில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச விசாரணைகள் இடம்பெற வேண்டும் என்ற தமது கோரிக்கைக்கு ஆதரவளிக்குமாறு இலங்கைக்கு உதவி வழங்கும் முக்கிய நாடுகளையும், பிரான்ஸ் அரசையும், ஐக்கிய நாடுகள் அமைப்பையும் தாங்கள் கோரவுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் இவ்விடயத்தைக் கைவிடப் போவதில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

பிரான்ஸைத் தளமாகக் கொண்டு இயங்கும் மேற்படி அமைப்பின் தொண்டுப் பணியாளர்களே மூதூரில் கொல்லப்பட்டனர் என்பது தெரிந்ததே. (சி)

## அன்னை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு முதலமைச்சர் கருணாநிதி அன்னையின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருக்கிறார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இலங்கையில் சமூக சேவகியாகத் திகழ்ந்த தங்கம்மா அப்பாக்குட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை மரணம் அடைந்த செய்தி கேட்டு மிகவும் வேதனை அடைந்தேன்.

'தமிழ்ப் பண்டிதை' என்று ஈழத் தமிழர்களால் அழைக்கப்பட்ட தங்கம்மா அப்பாக்குட்டி முறைப்படி தமிழ் கற்று ஆசிரியையாக இருந்தவர். திருமணம் செய்து கொள்ளாமல் சமூக சேவகியாகவே வாழ்ந்தவர்.

நூலகம் ஒன்றைத் தொடங்கி சிறந்த நூல்கள் வெளிவரக் காரணமாக இருந்த அவரின் இழப்பு ஈழத் தமிழர்கள் அனைவருக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அவரது பிரிவால் வாடும் தமிழர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன் -என்று கருணாநிதி தனது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

## நயினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையான பக்தர்கள் திங்கட்கிழமை தொடக்கமே நயினை ஆலயத்தை நோக்கிப் படையெடுக்க ஆரம்பித்திருந்தனர். இதனால் குறிகாட்டுவானில் இருந்து நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணி வரை ஆலயத்திற்கான படகுச் சேவை இடம்பெற்றிருந்தது.

போக்குவரத்துச் சபையினரும் நேற்றைய தினம் நயினை ஆலயத்திற்கென கூடுதல் பஸ்களை சேவையில் ஈடுபடுத்தி இருந்தனர்.பாதுகாப்புச் சோதனைகளையும் பொருட்படுத்தாது பெரும் எண்ணிக்கையில் பக்கதர் கூட்டம் தேர்த் திருவிழாவில் கலந்துகொண்டு இருந்தது.

ஏராளமான படகுகள் சேவையில் ஈடு படுத்தப்பட்ட போதிலும் அடியார் கூட்டம் குறிகாட்டுவானில் நிறைந்து காணப்பட்ட தால் படகுகளில் அதிக பயணிகளை ஏற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.இதனால் பக்கதர்களின் பாதுகாப்பு கருதி அவர்களுக்கு மிதக்கும் 'ஜக்கட்' வழங்கப்பட்டிருந்தது.

ஆலயச் சூழலில் தொண்டர்கள், சுகாதார பகுதியினர் மற்றும் பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

தாகசாந்தி நிலையங்கள் ஆங்காங்கே அமைந்திருந்தன. அமுதசுரபி அன்னதான சபையினர் வழக்கம் போல அடியவர்களுக்கு அன்னம் அளிக்கும் பணியினை மிகச் சிறப்பாக மேற்கொண்டிருந்தனர். (அ-02-111)

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பயங்கரவாதக் குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி தமிழ் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த வி.கவிதா, எஸ்.கவிதா, வி.முரளிதரன், கே. இரத்தினபாலன் ஆகிய நான்குபேருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நால்வரும் கடந்த ஒன்றரை வருடங்களாக மகரகமவில் உள்ள ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் தங்கியிருந்து கற்கை நெறிகளுக்கு சமுகமளித்தமைக்கான அனைத்து ஆதாரங்களையும் வழங்கிய போதும் அவற்றை ஏறக மறுத்த மருதானைப் பொலிஸார் இவர்கள் நால்வரையும் பயங்கரவாதக் குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைத்தனர்.

## தமிழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டுள்ளான் என இந்தோ - ஆசிய செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

பாம்பன் பகுதியில் உள்ள முத்துபேட்டை உயர்தரக் கல்லூரி மாணவனான ஜோசப் என்பவரே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

ஜோசப் தனது சகோதரனுடன் மீன்பிடிக்கச் சென்றவேளையே கைதுசெய்யப்பட்டுள்ளான். கறுப்பு பவுடரைக் கடத்தினார் என இவர் மீது இப்போது குற்றம் சாட்டப்பட்டுள்ளதாம். (சி)

## மட்டுத் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சேபித்துத்தாக்கல்செய்யப்பட்டிருக்கும் மனுவை விசாரணைக்கு எடுத்துள்ள தேர்தல் நீதிமன்றம் எதிர்மனுதாரர்களுக்கு எதிர்வரும் ஜூலை 14 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நோட்டீஸ் உத்தரவு பிறப்பிக்கவும் பணித்தது.

அமைச்சர் அமீர் அலி, மாகாண முதலமைச்சர் சந்திரகாந்தன், மாகாண அமைச்சர் ஹிஸ்புல்லா ஆகியோர் உட்பட 16 பேர் இந்த மனுவில் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ரஞ்சித் சில்வா முன்னிலையில் இந்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நோட்டீஸ் உத்தரவு பிறப்பிக்க நீதியரசர் பணித்தார். (சி)

## துண்டிப் பகுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணியளவில் ஷெல்கள் வந்து வீழ்ந்து வெடித்தன. சேதங்கள் ஏதும் ஏற்பட்டதாக தகவல் இல்லை.

ஷெல்கள் வந்து வீழ்ந்ததை அடுத்து துண்டிப் பகுதியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான பகுதிக்குச் சென்றுள்ளனர்.

இதேவேளை- நேற்று மாலை அந்தப் பகுதியில் சூட்டுச் சத்தங்கள் கேட்டன இச் சம்பவத்தில் சிப்பாய் ஒருவர் மரணமானதாக கூறப்பட்டது. ஆனால் அதை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. (அ-1-202)

## அக்கரைப்பற்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகாயமடைந்த சிப்பாய் அக்கரைப்பற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அம்பாறை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது. (சி)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.06.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org